Book 12

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# முஹம்மது நபி ஒரு அழகிய முன்மாதிரி



ஆகஸ்ட்
2000
August

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ........................................ 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ........................................ 19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57........................ 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்........................ 19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும் சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = ........................ 19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும் வார்த்தைகள் சரியாக ........................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும் எழுத்துக்கள் சரியாக 76 ........................................ 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..........................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ........................................ 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................. 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட 14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக் கூட்ட 29+14+14 = 57 = ........................................ 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்) = 822+14 = 836 = ........................................ 19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ........................................ 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும் முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ........................................ 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000, 50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ........................ 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

| செய்தி 1 | ஆகஸ்டு 2000<br>நினைவு 7 |
|---|---|

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


**ஆசிரியர் :**
**C.S. ரஃபியுத்தீன்**

**துணை ஆசிரியர் :**
**N.A. அஹமது ஹுஸைன்**

**தனிச்சுற்று இதழ்**

**சந்தா விபரம்**

**உள் நாடு ஓராண்டு ரூ. 60.00**

**தனி பிரதி ரூ. 5.00**

**புதிய நினைவூட்டல் மாத இதழ்**

**அலுவலகம்**


## இதழின் உள்ளே


★ இந்தக் குர்ஆனை நாம் இலகுவாக்கினோம்

★ மகத்தான வெற்றிக்கு என்ன வழி

★ தொழுகையைப் பற்றி ஒரு நற்செய்தி

★ முஸ்லிம்களை நரகத்திற்கு வழி நடத்துபவர்கள்

★ அல்குர்ஆன் மற்ற புத்தகங்களை போன்றதன்று

★ குர்ஆன் மட்டும் போதாதா?

★ அர்த்தம் - அனர்த்தம்

# இந்தக் குர்ஆனை நாம் இலகுவாக்கினோம் (54:17)

(மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீ∴பாவின் ஆங்கில மொழிபெயர்ப்பின் பின் இணைப்பு 3-ஐத் தழுவி எழுதப்பட்டது)

அல்குர்ஆ னின் வசனம் 11.1 குர்ஆனின் கணித அற்புதம் இரு பரிமாணங்கள் கொண்டதாக உள்ளது என்பதை நமக்கு அறிவிக்கிறது.அவை (1) குர்ஆனின் அமைப்பில் காணப்படும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட கணிதக் கட்டமைப்பு, மற்றும் (2) அதே சமயம் தனித்தன்மை வாய்ந்த, மிகச் சிறப்பான இலக்கியத் தரம்.

ஒரு குறிப்பிட்ட கணித அமைப்பில் எழுத்துக்களின் எண்ணிக்கைகளை மட்டும் சரியான ஒரு கட்டமைப்பில் வரும்படி ஒரு புத்தகத்தை ஒருவர் அமைத்து விடலாம். ஆனால் அவ்வாறு அமைக்கப்பட்ட அப்புத்தகத்தின் தரம் மிகவும் மோசமானதாகவே இருக்கும். அதில் எந்த ஒரு விஷயத்தையும் தெளிவாகக் கூற முடியாது. வேண்டியதை விவரிக்க முடியாது. அது உயர்ந்த இலக்கிய நடை உடையதாகவும் அமையாது. கருத்துக்கள் பொதிந்ததாகவும் இருக்காது. ஆனால் அல்குர்ஆன் ஒரே சமயத்தில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு பின்னிப்பிணைந்த கணிதக் கட்டமைப்பில் அமைக்கப் பட்டிருப்பதோடு உயர்ந்த இலக்கிய நடையும், அற்புதமான கருத்துக்களும், விவரிக்கப்பட்ட சட்டங்களும் கொண்டதாகவும் உள்ளது.

அது மட்டுமின்றி, குர்ஆனில் வார்த்தைகளும் எழுத்துக்களும் விநியோகம் செய்யப்பட்டிருக்கும் விதம், மனிதர்கள் குர்ஆனை மனனம் செய்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், அனுபவித்து மகிழ்ச்சியடையவும் ஏற்றதாய் உள்ளது. இத்தகைய விஷயங்களுடன் ஒரு அற்புதமான கணிதக் கட்டமைப்பும் குர்ஆனில்

அமைக்கப்பட்டிருப்பது. அவ்வற்புதத்தின் மேன்மையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மனிதர்கள் எழுதிய புத்தகங்களைப் போல் அல்லாமல் அல்குர்ஆன், மீண்டும் மீண்டும் கணக்கற்ற முறைகள் படிக்கவும், அனுபவித்து மகிழவும் ஏதுவாய் அமைந்துள்ளது.

இக்கட்டுரையின் தலைப்பு, அல்குர்ஆனின் 54வது அத்தியாயத்தில் 17, 22, 32, மற்றும் 40 ஆகிய வசனங்களில் இறைவனால் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. அதன் அடிப்படையில், குர்ஆனின் அரபு வடிவம் (உரை) மனனம் செய்பவருக்கு அடுத்தடுத்த வார்த்தைகளையும், வரிகளையும் நினைவு படுத்தும் விதமாக ஒரு சிறப்பான அமைப்பில் உள்ளதையும், இப்போது நாம் அறிந்து கொள்கிறோம். இறைவன் தான் நம்மைப் படைத்தார். மேலும் உயர்ந்த இலக்கிய நடை கொண்ட அவருடைய வேதத்தை நாம் நினைவில் வைத்துக் கொள்வதற்கு உதவ மிகத் திறமையான வழி முறைகளையும் அவர் அறிவார்.

எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட புத்தகங்கள் மிகக் குறைவாக இருந்த காலங்களில், தலைமுறைக்குப் பின் தலைமுறையாய் மனிதர்கள் குர்ஆனின் மூல வடிவத்தைப் பாதுகாப்பதில் குர்ஆனை மனனம் செய்து கொள்வது ஒரு முக்கிய பங்காக இருந்து வந்திருக்கிறது.

குர்ஆனை மனனம் செய்யும் ஒருவர், அதன் வார்த்தைகளின் சப்தங்களை உச்சரிக்கும் பொழுது, பின்னிப் பிணைந்திருக்கும் இலக்கிய அமைப்பின் மூலமும் சந்த அமைப்பின் மூலமும் தெய்வீகமான முறையில் உதவி செய்யப்படுகிறார். இதன் மூலம் குர்ஆனை மனனம் செய்வது மிகவும் எளிதாகி விடுகிறது. ஏறத்தாழ அனைத்து வசனங்களிலும் (Memory Bells) “நினைவூட்டும் மணிகள்” என்று நாம் அழைக்கக் கூடிய ஓர் அற்புத அமைப்பு காணப்படுகிறது.

படிக்கக் கூடியவருக்கு அடுத்து வரும் வார்த்தை அல்லது வரி என்ன என்பதை நினைவூட்டுவதே இந்நினைவூட்டும் மணிகளின் பணியாகும். இந்த அமைப்பு மிகவும் விரிவானதாகவும் உள்ளது. இங்கே, நாம் பளிச்செனத் தெரியக் கூடிய இரு உதாரணங்களை காண்போம்.

1. அத்தியாயம் இரண்டின் 127, 128 மற்றும் 129 ஆகிய வசனங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு இரு

இறைத் திருநாமங்களைக் கொண்டு முடிவதாக உள்ளது. அந்த மூன்று ஜதை இறைத்திருநாமங்களாவது; முறையே, அல்ஸமீவு, அல் அலீம், (அனைத்தையும் செவியேற்பவர், அனைத்தையும் அறிந்தவர்), அல் தவ்வாபு, அல்ரஹீம் (மீட்பவர் மிக்க அன்பாளர், அல் அஸீஸ், அல் ஹக்கீம் (எல்லாம் வல்லவர், மிகுந்த ஞானமுடையவர்) இது ஒரு சாதாரண புத்தகமாக இருந்திருந்தால் அந்த ஆறு இறைபெயர்களும் தவறாக ஜோடி சேர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால் குர்ஆனில் அவ்வாறல்ல. இந்த ஒவ்வொரு ஜோடி இறைப்பெயர்களும் அதே வசனத்தில் முந்திய வரிகளில் நினைவூட்டும் மணிகள்கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது.

அவை மனனம் செய்வோருக்கு இந்த இறைப் பெயர்களை நினைவூட்டுவதாக உள்ளது! இவ்விதமாக, வசனம் 127 இப்றாஹீமும் இஸ்மாயீலும் கஃபாவின் அடித்தளத்தை உயர்த்தியதைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இவ்வசனம் அல்ஸமீவு, அல் அலீம் என்று முடிகிறது. இப்பெயர்களில் தனித்து நிற்கும் முக்கியமான சப்தங்கள் ஸ, ம, அ ஆகியவை. இஸ்மாயீல் என்ற வார்த்தையிலும் இம்மூன்று சப்தங்களே பிரதானமானதாக உள்ளன. இவ்வசனத்தில் கவனத்தைக் கவரும் வண்ணம், அதே சமயம் அவ்வாசகத்தின் இலக்கியத் தரத்தை உயர்த்தும் விதமாக இஸ்மாயீல் என்ற வார்த்தை தாமதப் படுத்தப்படுகிறது

இவ்விதமாக, அவ்வசனம் கீழ்க்கண்டவாறு செல்கிறது:

“இப்றாஹீம் கஃபாவின் அடித்தளத்தை உயர்த்திய போது, இஸ்மாயீலுடன் சேர்ந்து ......" சாதாரணமாக ஒரு மனிதன் கூறுவதாக இருந்தால் “இப்றாஹீமும், இஸ்மாயீலும் சேர்ந்து கஃபாவின் அடித்தளத்தை உயர்த்திய போது....” என்றே கூறி இருப்பான். ஆனால் இஸ்மாயீல் என்ற வார்த்தையை இறைவன் தாமதிப்பதன் மூலம் அது வசனத்தின் இறுதிப்பகுதியை நோக்கிச் செல்கிறது. எனவே இவ்விதமாக அவ்வசனத்தின் இறுதியில் முடியும் இரு இறைப்பெயர்கள் ‘ஸமீவுல் அலீம்' என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

வசனம் 128ல் பிரதானமான வார்த்தை 'துப்' என்பதாகும். இது அல்தவ்வாபு, அல்ரஹீம் என்னும் இரு இறைப்பெயர்களின் முன்னால்

உள்ளது. எனவே துப் என்ற வார்த்தை இங்கே நினைவூட்டும் மணியாகச் செயல்படுகிறது.

2:129 வசனத்தின் இறுதியில் இடம் பெறும் இரு பெயர்கள் அஸீஸ்,ஹக்கீம்ஆகியன.இப்பெயர் களில்'ஸ' என்ற சப்தமும்'ஹ' என்ற சப்தமும் பிரதானமாக உள்ளன. கண் கூடாக, இவ்வசனத்தின் நினைவூட்டும் மணி 'யுஸக்கீஹிம்' என்ற வார்த்தையாகும்.

2. மற்றொரு நல்ல உதாரணம் 3:176,177, 178ஆகிய வசனங்க ளில் காணப்படுகிறது. இவ்வசனங்களில் நிராகரிப் போருக்கான தண்டனையை முறையே, அஸீம் (கடுமையான அச்சமூட்டுவது) என்றும், அலீம் (வலி மிகுந்தது) என்றும் முஹீன் (இழிவு தருவது) என்றும் இறைவன் வர்ணிக்கிறார். மனிதனால் எழுதப்பட்ட புத்தகமாக இருந்தால், இந்த இடத்தில் மனனம் செய்பவர்: இவ்வார்த்தைகளை முறைமாற்றி கூறி விடக்கூடிய சாத்தியம் அதிகம். ஆனால் இம்மூன்று வர்ணனைகளும் முறைமாறி விடுவதைத் தடுக்கும் விதமாக, இவ்வசனங்கள ஒவ்வொன்றிலும் இவ்வர்ணனை களுக்கு முன்னால் சக்திவாய்ந்த நினைவூட்டும் மணிகள் அமைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். வசனம் 176ல் இடம் பெறும் அஸீம் என்ற வார்த்தைக்கு முன்னால் ஹஸ்ஸூன் என்ற வார்த்தை இடம் பெறுகிறது. இவ்வார்த்தையிலும் பிரதானமாக ஸ என்ற சப்தமே இருப்பதால், அது அவ்வசனத்தின் இறுதியில் இடம் பெறும் வர்ணனையை நினைவூட்டுகிறது. வசனம் 177ல் இடம்பெறும் அலீம் என்ற வார்த்தைக்கு முன்னர் ஈமான் என்ற வார்த்தையின் சப்தம். நினைவூட்டும் மணியாகப் பணி செய்கிறது. மேலும் வசனம் 178ல் முஹீன் என்ற வார்த்தைக்கு முன்னர், அவ்வசனம் முழுவதும் 'ம' மற்றும் 'ஹ' ஆகிய சப்தங்கள் தாராளமாகப் பயன் படுத்தப்படுகிறது.

நினைவூட்டும் மணிகளுக்கான மற்றசிலஉதாரணங்களாவன; 3:173 இறுதிப் பகுதியும் 3:174ன் துவக்கம்; 4:52ன் இறுதிப்பகுதியும் 4:53ன் துவக்கமும்;4:61ன் இறுதிப்பகுதியும் 4:62ன் துவக்கமும் மற்றும் 18:53ன் இறுதிப்பகுதியும்,18:54ன்துவக்கமு ம் மற்றும் இன்னும் பற்பல உள்ளன.

***

# முஹம்மது நபி
## அழகிய முன்மாதிரி

இறுதி நபி முஹம்மத் இறைவனிடமிருந்து பெற்று இவ்வுலகிற்குத் தந்த ஒரே தூதுச் செய்தி அல்குர்ஆன் மட்டுமே, அதைத் தவிர வேறு எதையும் இறை நம்பிக்கையாளர்களுக்கு அவர் விட்டுச் செல்லவில்லை என்பதை அல்குர்ஆனின் ஆதாரத்தோடு எடுத்துரைக்கும் பொழுது ஹதீஸ்களின் அடிப்படையில் முஹம்மத் நபியை இறைவனுக்கு இணையாக்கி வணங்குபவர்கள் ஆத்திரம் கொள்கின்றனர். மேலும் குர்ஆனை மட்டும் பின்பற்ற வேண்டும், அதில் உள்ளவாறே கடவுளை மட்டும் ஒருமையுடன் வணங்க வேண்டும் என்று பிரசாரம் செய்பவர்கள் முஹம்மத் நபியை அவமதிக்கிறார்கள் எனவும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள் எனவும் இஸ்லாமிய அறிஞர்கள் என்றழைக்கப் படுவோர் துஷ்பிரசாரம் செய்து, மக்களைத் தூண்டி விட்டு ஆத்திரம் கொள்ளும்படி செய்கின்றனர். குர்ஆன் என்றால் என்ன, அதன் தரமும் மதிப்பும் என்ன என்றும் ஹதீஸ்கள் என்றால் என்ன அதன் நிலையும் அந்தஸ்தும் என்ன என்றும் அறியாத பாமர முஸ்லிம்கள் அவர்களுடைய அறிஞர்களை நம்பி சத்தியப் பிரசாரத்தை அறிந்து கொள்வதை விட்டு விலகிக் கொள்கின்றனர்.

தர்காக்களுக்குச் (நல்லோர்களின் சமாதிகள்) சென்று அங்கு அடக்கம். செய்யப்பட்டிருப் பவர்களிடம் பிரார்த்திப்பது இணைவைப்பு என்பதை ஏற்று விளங்கிக் கொள்ளும் மத்ஹபுவாதிகள் தங்களுடைய மத்ஹபு இமாம்களை இறைவனுக்கு இணை வைக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வதில்லை, ஒப்புக் கொள்வதுமில்லை.

மத்ஹபுவாதிகள் தங்கள் இமாம்களை இறைவனுக்கு இணையாக்குகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளும் தவ்ஹீதுவாதிகள் ஹதீஸ்களைக்

**அல்லாஹ்வின் தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது என்று இறைவன் கூறுகிறார். ஆம்! குர்ஆனைப் பின்பற்றுவதில்தான் அவர் முன்னோடியாக இருந்தார். இப்றாஹிமிடத்தில் உள்ள அழகிய முன்மாதிரியை நாம் குர்ஆனைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும் எனும்போது முஹம்மதிடத்தில் உள்ள அழகிய முன்மாதிரியை மட்டும் குர்ஆனைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாதா? அதை அறிந்து கொள்ள நாம் குர்ஆனை விட்டும் வெளியில் செல்ல வேண்டுமா?**

கண்மூடிப் பின்பற்றுவதன் மூலம் முஹம்மத் நபியையும் ஹதீஸ் தொகுப்பாளர்களையும்கடவுளுக்கு இணை வைக்கிறோம் என்பதை உணர்வதுமில்லை, ஒப்புக் கொள்வது மில்லை. இவ்வாறே இயேசு கடவுளின் மகன் அல்ல, அவர் ஓர் இறைத்தூதர் மட்டுமே என்பதைக் கிறித்துவர்கள் ஒப்புக் கொள்வதில்லை, இவர்கள் இயேசுவை அவமதிக்கிறார்கள் என்றே கூறுவர். மேலும் இணைவைத்து வணங்கும் எவரும் தங்களுடைய இணையாளர்கள் உண்மையில் கடவுளுக்கு நிகரானவர் என்று கருதுவதில்லை , கடவுளுக்கு அடுத்தபடியானவர் என்றே கருதுகின்றனர். ஆயினும் கடவுளுக்கு அடுத்த அந்தஸ்தில் கூட எவரும் இல்லை , அவர் தனித்த அந்தஸ்துடையவர். வேறு எவரையும் கடவுளுக்கு அடுத்தபடியாகக் கருதுவதும் கூட இணைவைப்பதே என்பதைக் குர்ஆன் தெளிவு படுத்துகிறது. அகிலங்களுக்கெல்லாம் அதிபதியான கடவுளுக்கு மற்ற அனைத்து படைப்புக்களும் அடிமைகளே. இவர்களில் யாரும் அவருக்கு அடுத்த படியான அந்தஸ்தை பெற முடியாது. அவருடைய அந்தஸ்து அத்தனை உயர்வானதாகும் என்று குர்ஆன் நமக்குக் கற்பிக்கிறது.

உண்மையில், அந் நல்லடியார்களின் போதனைக்கும். விருப்பத்திற்கும் மாறாக அவர்களை இறைவனுடன் இணை வைப்பவர்கள் தான் அவர்களை இழிவு செய்கின்றர். ஆயினும் தாங்கள் தான் அந் நல்லடியார்களை மிகவும்

மதிப்பதாகவும் கண்ணியப் படுத்து வதாகவும் கூறிக் கொள்கின்றனர். விந்தைதான்!

அவ்வாறே தூதருக்குக் கட்டுப்படுவதாகவும், அவரைக் கண்ணியப் படுத்துவதாகவும் கூறிக் கொண்டு முஹம்மதியர்கள் பின்பற்றும் ஹதீஸ்கள் தான் உண்மையில் தூதர் முஹம்மதை இழிவுசெய்கின்றன. ஹதீஸ்களைத் திறந்த மனத்துடன் ஆராய்ந்தால், இவ்வுண்மைதெளிவாக புலப்படும்.

'இறைவனுக்குக் கட்டுப்படுங்கள், முஹம்மதுக்குக் கட்டுப்படுங்கள்' என்று குர்ஆனில் உள்ளது, என் எவரேனும் கூறினால் குர்ஆனைச் சிறிதளவு அறிந்திருப்பவர் கூட ஆட்சேபிப்பார் அல்லவா? ஆம்! ஏனெனில் குர்ஆனில் அவ்வாறு இல்லை. மாறாக 'இறைவனுக்கு கட்டுப்படுங்கள், தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்றே அது கூறுகிறது. முஹம்மத் நபி இறைவனைச் சாட்சியாக வைத்து தனக்கு அருளப்பட்ட தூதுத்துவம் என்று கூறுவது குர்ஆன் மட்டுமே (6:19)

அல்லாஹ்வின் தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது என்று இறைவன் கூறுகிறார்..ஆம்! குர்ஆனைப் பின்பற்றுவதில்தான் அவர் முன்னோடியாக இருந்தார். இப்றாஹிமிடத்தில் உள்ள அழகிய முன்மாதிரியை நாம் குர்ஆனைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும் எனும்போது முஹம்மதிடத்தில் உள்ள அழகிய முன்மாதிரியை மட்டும் குர்ஆனைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாதா? அதை அறிந்து கொள்ள நாம் குர்ஆனை விட்டும் வெளியில் செல்ல வேண்டுமா?

உண்மையில் இறைவனின் அனைத்து நல்லடியார்களும் 'நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்களே, நீங்கள் உங்கள் வழிபாட்டை இறைவனுக்கு மட்டும் கலப்பின்றிச் செய்யுங்கள்' என்றே கூறினர். முஹம்மத் நபியும் அவ்வாறே கூறுகிறார். (பார்க்க 18:110) இதுவே குர்ஆனின் அடிப்படைச் செய்தியுமாகும்.

மெய்யாக அந்நல்லடியார்களிடம் மதியாதைஉள்ளவர்கள்அவர்களை வழிபடவும், துதிக்கவும், ஆராதிக்கவும் மாட்டார்கள். மாறாக அவர்கள் காட்டிய நேர்வழிப்படி இறைவனை மட்டுமே கலப்பின்றி வணங்குவார்கள்; வழிபடுவார்கள். ஆகவே நாமும் அவ்வழியிலேயே பின் தொடருவோமாக!

●●●

# ஹதீஸ் & சுன்னா : சாத்தானியக் கண்டுபிடிப்புகள்.

மெய்ப்பிக்கும் தூதருடைய குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பின் பின் இணைப்பு 19லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

கடவுளையும், அவருடைய வேத வசனங்களையும் விடுத்து வேறு எந்த ஹதீஸை இவர்கள் ஆதரிக்கிறார்கள்? (45:6)

இக்குர் ஆன் இட்டுக்கட்டி உருவாக்கப்பட்ட ஹதீஸ் அல்ல.......இது ஒவ்வொன்றையும் விவரிக்கிறது (12:111)

மற்றவர்களைக் கடவுளின் பாதையை விட்டுத் திசை திருப்புவதற்காக மக்களில் சிலர் தகுதி அற்ற ஹதீஸ்களை ஆதரிக்கின்றனர். (31:6)

பின்பற்றப்படவேண்டிய ஒரே சுன்னா இறைவனின் சுன்னா. (17:77, 33:62, 48:23, 6:114)

நபியின் விரோதிகள் - இவர்கள் மனித மற்றும் ஜின் சாத்தான்கள் என்று இறைவனால் விவரிக்கப்படுகிறார்கள். சிலர் பொய்களை இட்டுக் கட்டி உருவாக்கி அவற்றை நபியிடமிருந்து பெற்றதாகக் கூறுவார்கள் என்று குர்ஆன் நமக்குக் கற்பிக்கிறது. (6:112, 25:31) மிகச் சரியாக இதுதான் முஹம்மத் நபி இறந்த பிறகு நடந்தது. ஹதீஸ் (வாய்மொழி) மற்றும் சுன்னா (செயல்கள்) ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டு, அவற்றை நபியிடமிருந்து பெற்றதாகக் கூறப்பட்டது. ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகியவை சாத்தானியக் கண்டுபிடிப்புக்களே.

ஏனெனில் (1) குர்ஆன் முழுமையானது, மிகச் சரியானது, நன்கு விவரிக்கப்பட்டது, மேலும் மார்க்க வழிகாட்டல்களுக்கு, இறைவனை அடைவதற்கு, அது மட்டுமே - ஆதாரமாக இருக்க வேண்டும் (6:17, 38, 114, & 45:6-7) என்ற இறை வலியுறுத்தல்களை அவை எதிர்க்கின்றன.

ஹதீஸ்கள் நபிக்கு எதிராக அவதூறுகளைக் கூறுவதோடு, குர்ஆனை மட்டும் பின்பற்றுவதை ஆதரிக்காத, - பின்பற்றாத கொடுங்கோலனாக பாவியாக அவரைச் சித்தரிக்கின்றன.

மூட நம்பிக்கைகள், அறியாமை, அறிவுக்கு ஒவ்வாத, நியாயப்படுத்த முடியாத பாரம்பர்ய நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான போலிக் கொள்கைகளை உருவாக்குகின்றன.

மார்க்க ஆதாரமாக, போதனைகளாகக் குர்ஆனை தவிர வேறு எதையும் கொடுப்பதை விட்டும் முஹம்மத் நபி, கடுமையான வார்த்தைகளால் தடுக்கப்பட்டிருந்தார். (69:38-48)

சில முஸ்லிம்கள் அனுசரித்துப் போகமுயற்சிப்பார்கள்

“குர்ஆனுக்கு ஒத்து வரும் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வோம், குர்ஆனுக்கு முரண்பட்டால் அவற்றை மறுத்து விடுவோம்!" அவர்களுடைய இந்த வாக்குமூலம், குர்ஆன் முழுமையானது, விவரிக்கப்பட்டது மிகச் சரியானது என்ற கடவுளின் வலியுறுத் தல்களை அவர்கள் நமபவில்லை என்பதை நிரூபிக்கிறது. எவ்வளவு நல்லதாகத் தெரிந்தாலும் சரி, குர்ஆனுடன் சேர்த்து மற்றவற்றிலும் வழிகாட்டலைத் தேடும் அந்தக் கணமே அவர்கள் சாத்தானின் வலையில் விழுந்து விடுகின்றனர் (பார்க்க 63:1). ஏனெனில் அவர்கள் கடவுளின் வார்த்தைகளை ஏற்க மறுத்து, கடவுளுடன் மற்றொரு கடவுளை அமைத்துக் கொள்கின்றனர்.

குர்ஆனைச் சூழ்ந்து, அதைப் பாதுகாத்து, மெய்ப்பிக்கும் அற்புதக் கணித அமைப்பு, குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான பல கணித ஆதாரங்களை நமக்கு வழங்குகிறது. இங்கே 2 உதாரணங்கள் மட்டும் குறிப்பிடப் படுகின்றன.

1. நாம் இந்தப் புத்தகத்தில் எதையும் விட்டு விடவில்லை. (6:38)

مَا فَرَّطْنَا فِى الْكِتٰبِ مِنْ شَىْ

இந்த அறிவிப்பு இடம் பெறும் வசன எண் 38. (19X 2 ) மேலும் இவ்வாசகத்தில் இடம்பெறும் அரபு எழுத்துக்கள் 19.

2. அவர் இந்த வேதத்தை முழுமையாக விவரிக்கப்பட்டதாக இறக்கினார். (6:114)

اَنْزَلَ اِلَيْكُمُ الْكِتٰبَ مُفَصَّلاً

இது இடம் பெறும் வசன எண் 114. (19 X 6) மேலும் இதில் இடம் பெறும் அரபு எழுத்துக்களின் எண்ணிக்கையும் 19.

# மகத்தான வெற்றிக்கு என்ன விலை?

மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா அவர்களின் குர்ஆன் மொழிபெயர்ப்பின் பின் இணைப்பு 36லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது

**வே**தம் கொடுக்கப்பட்ட மக்கள் (யூத, கிறித்துவ, முஸ்லிம்கள்) நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்தினால், நாம் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, பாக்கியம் மிக்க சுவர்க்கத்தில் அவர்களை நுழைய அனுமதிப்போம். அவர்கள் தவ்ராத்தையும், (தோரா) இன்ஜீலையும், (பைபிள் - Gospel) இதில் இறக்கப்பட்டவற்றையும் கடை பிடித்தால் அவர்களுக்கு மேலிருந்தும் அவர்களுடைய கால்களுக்குக் கீழிருந்தும் உணவு வகைகளை அவர்கள் அனுபவித்திருப்பார்கள்.அவர்களில் சிலர் நல்லவர்கள், ஆனால் அவர்களில் பெரும்பாலோர் பாவம் செய்பவர்கள் (5:65-66)

பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்களும் நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வைத் தொடர்ந்து நடத்தினால், நாம் அவர்களுக்கு வானிலிருந்தும் பூமியிலிருந்தும் அருள்மாரி பொழிந்திருப்போம். (7:96)

இறைவன் ஒருவர்தான் உங்கள் இன்பங்களையோ அல்லது துன்பங்களையோ கட்டுப்படுத்து கிறார். இறைவன் ஒருவர்தான் உங்களைச் செல்வந்தராகவோ அல்லது ஏழையாகவோ ஆக்குகிறார்.(53:43, 48)

**?** இறைவனின் சட்டங்களை ஏற்று நடக்கும் ஒரு சமுதாயத்திற்கு உலகின் மற்ற சமுதாயங்களை விட முக்கியத்துவமும், வெற்றியும், வளமும், மகிழ்ச்சியும் உத்திரவாத மளிக்கப் படுகின்றது. (10:62-64, 16:97, 24:55, 41:30-31) மற்றொரு புறத்தில், இறைவனின் சட்டங்களை மீறிச் செயல்படும் ஒரு சமுதாயம் துன்பம் மிகுந்த ஒரு வாழ்விற்கு உள்ளாகிறது. (20:124) இறைவனின் சட்டங்களை ஏற்று 'நடக்கும் ஒரு சமுதாயம் மகத்தான ஒரு சமுதாயமாவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது, இது ஒன்றும் ஒரு தத்துவார்த்தக் கனவு

அல்ல. இறைவன் அனைத்திலும் முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார் (10:61) அவருடைய உத்திரவாதங்களும் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்.

இறைச்சட்டங்களை ஏற்று
நடக்கும் ஒரு சமுதாயத்தின்
குண நலன்களாவன:

1. மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம் மத சுதந்திரம், கருத்து சுதந்திரம், இடம் பெயரும் சுதந்திரம் மற்றும் பொருளாதார சுதந்திரம் (2:256, 10:99, 88:21-22)

2. அனைத்து மக்களுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்ட மனித உரிமைகள். இதில் எத்தகைய இன, நிற, மத வேறுபாடுகள் அல்லது சமுதாய அந்தஸ்து, பொருளாதார நிலை அல்லது அரசியல் தொடர்புகள் போன்ற எந்த வேறுபாடுகளும் இல்லை. (5:8, 49:13)

3. அனைத்து மக்களுக்கும் வளமை. இறைவனின் பொருளாதார அமைப்பு, தொடர்ந்த செல்வச் சுழற்சி, அநியாய வட்டி இன்மை , மற்றும் பயன் தரும் முதலீடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. சூதாட்டம் லாட்டரி குலுக்கல் மற்றும் உயர்சதவீத வட்டிக்கடன் போன்ற பயன் தராத பொருளாதாரங்கள் அனுமதிக்கப் படுவதில்லை. (2:275-277, 59:7)

4. அனைவருக்கும் சமூக நீதி. கடமையான தர்மத்தின் (ஜகாத்) மூலம் யாரும் பசியுடனோ அல்லது வீடின்றியோ இருக்க மாட்டார்கள் (2:215, 70:24-25, 107)

5. ஒரு மித்த கருத்தின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்பு. ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசனை செய்தல் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றினால், எந்த ஒரு விவகாரத்திலும், அதன் ஒரு பக்கம், விவாதத்தில் பங்கு கொள்ளும் அனைவரையும் திருப்தி செய்யும். இதன் இறுதி விளைவு என்னவென்றால், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒருமித்த ஒப்பந்தம் 49% சிறுபான்மையினரின் தலையில் அறையப்படும் 51% பெரும்பான்மையினரின் கருத்து அல்ல(42:38)

6. மிக உயர்ந்த குண நலன்களை, நடவடிக்கைகளைக் கடைபிடிக்கக் கூடிய, அவற்றை ஆதரிக்கக் கூடிய ஒரு சமுதாயம். அங்கே உறுதியான குடும்ப அமைப்பு இருக்கும். மது மற்றும் போதைப் பழக்கங்கள் இருக்காது. சட்ட விரோதமான, தகப்பன் பெயர்

எனவே மக்களின் உயிருக்கும் உடமைக்கும் எதிரான குற்றங்கள் இருக்காது.

8.மக்கள் ஒருவருக் கொருவரிடையிலும் சமுதாயங்களுக்கு இடையிலும், அன்பு, மரியாதை, அமைதி, பரஸ்பர மதிப்பு ஆகியவை நிலவும்.(3:110,60:8-9)

## இறைச்சட்டங்களை ஏற்று நடக்கும் ஒரு <u>சமுதாயத்தின் குண நலன்களாவன:</u>

மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம்-மத சுதந்திரம், கருத்து சுதந்திரம், இடம் பெயரும் சுதந்திரம் மற்றும் பொருளாதார சுதந்திரம் (2:256, 10:99, 88:21-22)

அனைத்து மக்களுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்ட மனித உரிமைகள். இதில் எத்தகைய இன, நிற, மத வேறுபாடுகள் அல்லது சமுதாய அந்தஸ்து, பொருளாதார நிலை அல்லது அரசியல் தொடர்புகள் போன்ற எந்த வேறுபாடுகளும் . இல்லை . (5:8, 49:13)

தெரியாத குழந்தைகள், கருச்சிதைவுகள் இருக்காது, விவாகரத்துக்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கும்.

7. மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உச்சபட்ச மதிப்பு கண்ணியம் கொடுக்கப்படும்.

9. வீணடிக்கும் பழக்கங்களைத் தடுப்பதன் மூலமும், நஷ்டங்களைத் தடுப்பதன் மூலமும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகின்றது.(30:41)

## இணைவைப்பு என்றால் என்ன என்று தெரியாதவர்கள்

இறைநம்பிக்கைக்குச் சாட்சியம் (ஷஹாதத்) கூறும் பொழுது "முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்று கூறுவது இணைவைப்பு ஆகாது என 'முஸ்லிம் அறிஞர்கள்' அவர்களைக் கண்மூடிப் பின்பற்றும் முஸ்லிம்களை ஏமாற்றி வருகிறார்கள். இதற்கும், இட்டுக்கட்டப் பட்ட ஹதீஸ்களைக் கண்மூடிப் பின்பற்றுவதற்கும் அவர்கள் கூறும் ஒரே ஆதாரம், இறைவனுக்கும் தூதருக்கும் கட்டுப்படுமாறு கூறும் வசனங்கள் மட்டுமே. முஹம்மத் இறைவனிடம் இருந்து பெற்ற தூதுச் செய்தி குர்ஆன் மட்டுமே (6:19) என்ற உண்மையை மக்கள் நினைவை விட்டும் மறக்கடித்து விட்டனர்.

அவர்களுடைய இந்த நடவடிக்கைகள் அவர்களுடைய இரண்டு பெருந்துரதிர்ஷ்டங்களை நமக்குத் தெளிவாக்குகின்றன.

1. பொதுவாக இன்றைய பெயர் தாங்கி முஸ்லிம்கள் இறைவனை மட்டும் தனித்தவராக நினைக்க, வணங்க, ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. - இறைவனாலும் வானவர்களாலும் (மலக்குகள்) அறிவுடைவர்களாலும் கூறப்படும் சாட்சியத்தை, 'லா இலாஹ இல்லல்லாஹ்' (கடவுளைத் தவிர யாரும் கடவுள் இல்லை) என்ற ஓரிறைக் கொள்கைக்கான சரியான சாட்சியத்தை ஒப்புக் கொள்ள தயாராக இல்லை. அனைத்திற்கும் அவர்களுக்கு இறைவனுடன் முஹம்மதும் வேண்டும். ஆனால் இந்த "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற சாட்சியத்தைக் கூறும்படியே எல்லா இறைத்தூதர்களும், நபிமார்களும் (வேதம் கொண்டு வரும் தூதர்கள்) முஹம்மத் நபி உட்பட போதித்தனர். (பார்க்க 21:25)

2. அவர்களுக்கு இணைவைப்பு என்றால் என்னவென்றே தெரியவில்லை. இணைவைப்பு என்றால், கடவுளுடன் வேறு எந்த ஒன்றையும் இணைப்பது - அது எந்த வகையில், வடிவத்தில் அமைப்பில் செய்யப்பட்டாலும் சரியே. கடவுளுடன் இணைந்து வேறு எந்தப் பெயரையும் உச்சரிப்பது கூட இணை வைப்பே என்பதைக் குர்ஆன் நமக்கு மிகத் தெளிவாக அறிவிக்கிறது. (பார்க்க 39:45, 40:10-12)

நீங்கள் ஒரு விருந்துக்கு என்னை அழைத்து விட்டு, என்னுடன் என் வேலையாளையும் அழைத்து வருமாறு கூறினால், நீங்கள் என்னை தனியாக அழைத்ததாகாது. என்னுடன் வருபவர் (அரபியில் ஷரீக்) என் வேலையாள்தான் என்று நீங்கள் கூறினாலும், நீங்கள் என்னைத் தனித்து அழைத்ததாகாது. இது இணைவைப்பு ஆகும்.

"இறைவன் மட்டும் தனித்துக் கூறப்பட்டால் மறுமை வாழ்வை நம்பாதவர்களின் உள்ளங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால், அவருடன் மற்றவர்கள் சேர்த்துக் கூறப்பட்டால், அவர்கள் திருப்தி அடைந்து விடுகின்ற னர்" (39:45).***

# தொழுகையைப் பற்றி ஒரு நற்செய்தி

மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீ∴பா ஆசிரியராக இருந்த ஆங்கில சிற்றிதழ் Muslim Perspective லிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்படுகிறது.

தொடர்புத் தொழுகையில் இறைவனால் வடிவமைக் கப்பட்ட ஒரு அற்புதமான எண்ணிக்கைகளின் கூட்டமைப்பு மூலம் நம்முடைய இரட்சகருக்கும் நமக்கும் இடையில் தொடர்பு ஏற்படுகிறது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டு, அறியப்பட்ட ஒன்றாகி விட்டது. (பார்க்க பு.நி. / இதழ் ஜனவரி, மார்ச்) தொழுகையில் இறைவனுடன் நமது தொடர்புக்கான கதவைத் திறக்கும் திறவு கோலாக செயல்படுவது குர்ஆனின் முதல் அத்தியாயமான 'திறவுகோல்' என்ற அத்தியாயத்தில் அமைக்கப் பட்டுள்ள எண்களின் கூட்டமைப்பே ஆகும்.

ஒவ்வொரு நாளும் ஐந்து முறை அவருடன் நாம் தொடர்பை நிறுவிக் கொள்ள 'சப்தங்களின் கூட்ட மைப்பை இவ்வத்தியாயத்தில் எல்லாம் வல்ல இறைவன் அமைத் திருக்கின்றார். எல்லா நாட்டைச் சேர்ந்த அடி பணிந்தவர்களும் (முஸ்லிம்கள்) அவர் எந்த மொழியைப் பேசுபவராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பொதுவாக 'உலகளாவிய' அளவில் பயன்படுத்துவதற்காக, அந்த சப்தங்களின் கூட்டமைப்பு எண்ணிக்கைகளால் வடிவமைக்கப் பட்டுள்ளது.

எனவே, தொடர்பை ஏற்படுத்துவது திறவுகோல் , (அல்ஃபாத்திஹா) அத்தியாயத்தின் அர்த்தம் அல்ல, அதில் எண்ணிக்கைகளால் அமைக்கப் பட்டிருக்கும் சப்தங்களின் கூட்டமைப்புத்தான் தொடர்பை ஏற்படுத்துகிறது.

நாம் தொழுகையில் சூரா அல்ஃபாத்திஹாவை ஓதும்போது இப்பிரபஞ்சத்தில் சில விஷயங்கள் நடைபெறுகின்றன, மேலும் அதன் மூலம் நாம் நம்முடைய இறைவனிடம் தொடர்பு கொள்கிறோம். இதன். விளைவு, இப்பொழுதும், எப்பொழுதும் நமக்குப் பூரண மகிழ்ச்சி. ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைகள் இறைவனைத்

தொழுவதன் மூலம் நாம் நம்முடைய ஆன்மாவை ஊட்டப்படுத்திக் கொள்கிறோம்.

அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் அற்புதக் கணிதக் கட்டமைப்பு குறித்த விபரங்களை இதற்கு முந்திய இதழ்களில் கண்டோம். மேலும் அல்ஃபாத்திஹாவை நாம் ஓதும்போது சரியாக 19 முறை நம்முடைய உதடுகள் ஒட்டுகிறது (பே-4,மீம்-15) நம்பிக்கையாளர் களின நம்பிக்கைய அதிகப்படுத்தி, அவர்களுக்கு உறுதியான நம்பிக்கையை அளிக்கும் 19ன் கட்டமைப்பு, பாமரரும் விளங்கிக் கொள்ளும் வகையில் இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய முஸ்லிம்கள் அல்ஃபாத்திஹா ஓதும் போது பிஸ்மில்லா என்ற முதல் திருவாசகத்தை ஓதுவதை சாத்தானிய ஹதீஸ்கள் ‘மக்ரூஹ்' (வெறுக்கத் தக்கது) என்று கூறுவதால் அவர்கள் பிஸ்மில்லாவை . ஓதுவதில்லை. மேலும் அதன் இறுதியில் 'ஆமீன்' என்ற சொல்லையும் சேர்த்து ஓதுகின்றனர். இதனால் இறைவன் அமைத்த கட்டமைப்பு குலைந்து போவதுடன், இறைவனுடனான தொடர்பையும் அவர்கள் இழந்து விட சாத்தான் ஏற்பாடு செய்து விட்டான்.

**“சாத்தான் ஐவேளைத் தொடர்புத் தொழுகையைத் தொழக்கூடிய அடிபணிந்தவர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்கள் இறைவனுடன் தொடர்பு கொள்வதைத் தடுக்கக் கடும் முயற்சி செய்கிறான். ஆனால் உண்மையில் அதன் மூலம் இறைவனுடனான நமது தொடர்பு துண்டிக்கப் படுவதில்லை என்பதே. இதில் உள்ள நற்செய்தி ஆகும். எனவே சாத்தானின் திசை திருப்புதல்களை நீங்கள் பொருட் படுத்தவோ அல்லது ‘சரியாகக் கவனம்' செலுத்தாததால் உங்கள் தொழுகை பாழாகி விட்டதாகவோ கருத வேண்டாம்."**

சாத்தான் ஐவேளைத் தொடர்புத் தொழுகையைத் தொழக்கூடிய அடிபணிந்தவர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்கள் இறைவனுடன் தொடர்பு கொள்வதைத் தடுக்கக் கடும் முயற்சி செய்கிறான். ஆனால் உண்மையில் அதன் மூலம் இறைவனுடனான நமது தொடர்பு துண்டிக்கப் படுவதில்லை என்பதே. இதில் உள்ள நற்செய்தி ஆகும். எனவே சாத்தானின் திசை திருப்புதல்களை நீங்கள் பொருட் படுத்தவோ அல்லது 'சரியாகக் கவனம்' செலுத்தாததால் உங்கள் தொழுகை பாழாகி விட்டதாகவோ கருத வேண்டாம்.

இறைவனால் நமக்கு அருளப்பட்ட, எண்ணிக்கைகளால் அமைக்கப்பட்ட சப்தங்களின் கூட்டமைப்பே இறைவனின் அருள்பெற்ற தொடர்பை ஏற்படுத்துகிறது. மகிழ்ச்சி அடையுங்கள், உங்களை மனந்தளரச் செய்வதில் சாத்தானை வெற்றி பெற் விட்டு விடாதீர்கள்.

**உங்கள் ஆன்மாவின்**
**அடையாளச் சின்னம்**
**அதிகாலைத் தொழுகை.**

1. ஒவ்வொரு நாளும் சூரிய உதயத்திற்கு முன்னர் உங்களுடைய (ஃபஜ்ர்) அதிகாலைத் தொடர்புத் தொழுகையை நீங்கள் செய்யவில்லை என்றால், உங்கள் இரட்சகரை வணங்குவதற்காக உங்கள் 'உடம்பை' விழிக்கச் செய்யும் அளவுக்கு உங்கள் 'ஆன்மாவில்' வலு இல்லை . உங்கள் ஆன்மா மிகவும் ஊட்டக்குறைவான தாகவும், சுருங்கியதாகவும் உள்ளது.

நீங்கள் . உங்களுடைய மேலாடைக்கு அதாவது உடம்புக்கு உணவளிக்கவும் அதற்காகக் கவனம் எடுத்துக் கொள்ளவும் செய்கிறீர்கள், அதே சமயம் - 'உங்களை அலட்சியப்படுத்தி விடுகிறீர்கள்.

2. உங்கள் அதிகாலைத் தொழுகையை நீங்கள் சிரமப்பட்டு விருப்பமில்லாமல் செய்கின்றீர்கள் என்றால், உங்கள் ஆன்மா வளர்கிறது. நீங்கள் உங்களுடைய சரியான பாதையில் இருக்கின்றீர்கள்.

3. நீங்கள் காத்திருந்து, விருப்பத்துடன் அதிகாலைத் தொழுகையைக் கடைப் பிடிக்கின்றீர்கள் என்றால் வாழ்த்துக்கள். உங்களுடைய ஆன்மா வலுவானதாகவும், நன்கு வளர்ச்சியடைந்ததாகவும் உள்ளது. உங்கள் ஆன்மாதான் நீங்கள். உண்மையானநபர்.

# முஸ்லிம்களை நரகத்திற்கு வழி நடத்துபவர்கள்

ஷைக் முதவல்லி அல்ஷரவி மற்றும் இஸ்லாமிய அறிஞர்கள்

கோடிக்கணக்கான முஸ்லிம்களை நரகத்திற்கு வழிநடத்துகின்றனர்

மறுக்க முடியாத குர்ஆன் ஆதாரம் முஸ்லிம்களுக்குச் சரியான வழிகாட்டுகிறது

ரஷாத் கலீஃபா ஆசிரியராக இருந்த Muslim Perspective (அடிபணிந்தோர் தொலைநோக்கு) என்ற ஆங்கிலச் சிற்றிதழின் ஜுன் 1987 இதழில் வெளியான ஓர் ஆக்கத்தைத் தழுவியது

ஷைக் முதவல்லி அல் ஷரவி, எகிப்தின் முன்னாள் மதவிவகார அமைச்சர், அரபுலகில் பெரிதும். மதிக்கப்படும் ஓர் இஸ்லாமிய அறிஞர். (அவரும் அவரைப் போன்ற மற்ற இஸ்லாமிய அறிஞர்களும் தங்கள் உரைகளைத் துவக்கும் போது உபயோகிக்கும் ஒரு துதிச் சொற்றொடரை நாம் இங்கே ஆராய்கிறோம்)

ஒவ்வொரு மனிதனும் ஓர் இறை நம்பிக்கையாளராக ஆகுவதற்கு தகுதி பெற்றவரே என்பதை நன்கு அறிந்து கொண்ட நிலையில், ஷைக் ஷரவியும், அவரைப் போன்ற இஸ்லாமிய அறிஞர்களும் அவர்களுடைய ஏராளமான விசிறிகளும் சாத்தானின் தந்திரங்களைக் கண்டு கொண்டு தங்களுடைய சொந்த மீட்சிக்காக இறைவன் பால் விரைந்தோடுவார்கள் என்று நேர்மையாக ஆதரவு வைத்து நான் இவ்விமரிசனத்தை எழுதுகிறேன். இவ்விமரிசனம் ஓர் அன்பினால் ஆன செயலே அன்றி வெறுப்பினால் அல்ல.

ஷைக் ஷரவி மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் விரிவான கொள்கை விளக்கங்களுக்குள் நாம் செல்ல வேண்டியதில்லை. நான் இங்கே ஆராய்வது புகழ்பெற்ற அவர்களுடைய துவக்க உரையை மட்டுமே.

அவர்கள் தங்கள் உரைகளை இவ்வாறு துவக்குகிறார்கள்.

“அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸ்லாமு அலா அஷ்ரஃபுல் முர்ஸலீன், ஸையிதினா முஹம்மதின் வ அலா ஆலிஹி வஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

இதன் தமிழாக்கம்

“எல்லாப் புகழும் கடவுளுக்கே, மேலும் சாந்தியும் ஆசியும் தூதர்களில் மிகக் கண்ணியமுடையவர் எங்கள் தலைவர் முஹம்மதின் மீதும் அவருடைய குடும்பத்தார், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக”

முஹம்மத் நபியின் மூலம் நாம் பெற்ற இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆன், அவர்கள் இத்துதிச் சொற்களை உச்சரிக்கும் போது இறைவனின் அருளிலிருந்து துண்டிக்கப் படுகிறார்கள் என்பதை நமக்கு அறிவுறுத்துகின்றது. ஏனெனில் அவர்கள் கடவுளையும், அவருடைய இறுதி நபியையும் கீழ்படிய வில்லை, கட்டுப்பட வில்லை.

‘நாம் கடவுளுடைய தூதர்களுக்கிடையில் எந்தப் பேதமும் வித்தியாசமும் ஒரு போதும் காட்டக் கூடாது' என்று மீண்டும் மீண்டும் குர்ஆன் கட்டளையிடுகிறது. (பார்க்க 2:136, 2:285, 3:84, மற்றும் 4:152)

2:285ல், தூதர்களுக்கிடையில் எந்தப் பேதமும் பாராட்டக் கூடாது என்ற ' இக்கட்டளையைக் கேட்டவுடன், கேட்டோம், கட்டுப்பட்டோம் எனக் கூறி கட்டுப்படுவது உண்மையான நம்பிக்கையாளர்களின் இலக்கணம் என்று கடவுள் விவரிக்கிறார். இவ்வசனத்தில், இடம்பெறும் முக்கிய வார்த்தையான 'கட்டுப்பட்டோம்' என்பது, தூதர்களிடையில் நாம் பேதம், வித்தியாசம் காட்டுவது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நமக்குக் காட்டுகிறது. இதன் மூலம் நாம் கடவுளுக்கும், அவருடைய தூதர்களுக்கும் கட்டுப்படாமல் மாறுசெய்கிறோம்.

கடவுளுக்கும் அவருடைய தூதர்களுக்கும் கட்டுப்படாமல் மாறு செய்வது கொண்டு நிரந்தரமான நரகத்தால் நாம் தண்டிக்கப்படுவோம். “யார் கடவுளுக்கும் அவருடைய தூதர்களுக்கும் கட்டுப்படாமல் மாறு செய்கிறார்களோ, அவர்கள் நிரந்தரமான நரகிற்கு உள்ளாவார்கள், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கி இருப்பார்கள். (72:23)

என்னருமை வாசகர்களே, ஷைக் ஷரவியும், மற்ற இஸ்லாமிய அறிஞர்களும், முஹம்மத் நபியை 'தூதர்களில் மிகக் கண்ணியமுள்ளவர்கள், எங்கள் தலைவர் முஹம்மத் என்று அழைக்கும் போது, கடவுளின் கட்டளைகளை மீறவில்லையா? கடவுளுக்கும் அவருடைய தூதருக்கும் மாறு செய்யவில்லையா? முஹம்மத் நபியின் விருப்பத்திற்கு மாறாக, அவரைக் கடவுளுக்கு இணையாக மதிக்க, துதிக்க வில்லையா?

ஷைக் ஷரவியும் இஸ்லாமிய அறிஞர்களும் திருந்தினால் அன்றி அவர்கள் தங்களைப் பின்பற்றும் கோடிக்கணக்கான முஸ்லிம்களை ஒரே ஒரு இடத்திற்குத்தான் வழிகாட்டுவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை : அது நரகம் தான்.

இத்தகையவர்களுடனான எனது அனுபவங்கள், இவர்கள் அனைவரும் குர்ஆனின் வசனங்கள் 2:253, மற்றும் 17:55 ஆகியவற்றைக் கொண்டு தங்களுடைய செயல்களை நியாயப்படுத்த முனைவார்கள் என்று எனக்குக் கூறுகிறது. அதாவது 'இறைவன் சில தூதர்களை விடச் சில தூதர்களைச் சிறப்பித்திருக்கிறார்' என்ற வசனம்.

குர்ஆன், குறிப்பிட்டுக் கூறுவது என்னவென்றால் இறைவன் மூஸாவிடம் (Moses) நேரடியாகப் பேசியதன் மூலம் சிறப்பித்தார். மரணித்தவர்களை உயிர்ப்பிக்க ஈஸாவை (Jesus) அனுமதித்ததன் மூலம் அவரைச் சிறப்பித்தார். தாவூதுக்கு (David) ஜபூர் (Psalms) தந்ததன் மூலம் அவரைச் சிறப்பித்தார். ஆனால் நாம் இங்கே முக்கியமான ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இவ்விதமாகத் தூதர்களில் சிலைரை விடச் சிலரைச் சிறப்பிப்பது கடவுள், நாம் அல்ல. கடவுள் அவர் நாடியதைச் செய்வார் (குர்ஆன் 21:23) கடவுள் பல்வேறு வழிகளில் தூதர்களைச் சிறப்பித்திருக்கிறார் என்ற உண்மை நடப்பைக் கூறும் ஓர் அறிக்கையே அது. நாம் 'தூதர்களிடையில் எந்த வித்தியாசமும் பாராட்டக்கூடாது என்று கடவுளால் மிகத் தெளிவாகக் குர்ஆனில் கட்டளையிடப் பட்டுள்ளோம்.

## இணையத்தில் புதிய நினைவூட்டல்

நம் புதிய நினைவூட்டல்
இதழ் மற்றும் நமது ஆக்கங்கள் இணையத்தில்
Kadavulmattum.org என்ற முகவரியில் காணலாம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

# அல்குர்ஆன்

## மற்றப் புத்தகங்களைப் போன்றதன்று.

மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபாவுடைய, குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பின் பின் இணைப்பு 20லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது

குர்ஆன் இவ்வுலகிற்குக் கடவுளின் இறுதிச் செய்தி ஆகும், மேலும் அவர் அதனைச் சிறிதளவும் சிதைவு செய்ய முடியாதவாறு தாமே பாதுகாப்பதாகவும் உறுதி மொழி எடுத்திருக்கின்றார். (15:9) எனவே, இவ்விதமாக, அதனைப் பாதுகாக்கவும், அதற்குச் சேவை செய்யவும் கண்ணுக்குத் தெரியாத சக்திகளால் குர்ஆன் சூழப்பட்டதாக உள்ளது (13:39, 41:42, 42:24)

மற்றப் புத்தகங்களைப் போல் அல்லாமல், குர்ஆன் கடவுளால் கற்றுக் கொடுக்கப்படுகிறது (55:12). நமக்குத் தேவைப்படுவதை, தேவைப்படும் நேரத்தில் அவர் கற்றுக் தருகிறார் இதனால்தான் நாம் நூற்றுக்கணக்கான முறைகள் குர்ஆனைப் படித்தாலும் நமக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை

உதாரணமாக நாம் ஒரு கதைப்புத்தகத்தை ஒரு சில முறைகள்தான் படிக்க முடியும், ஆனால் குர்ஆனை நாம் கணக்கற்ற முறைகள் படித்தாலும், ஒவ்வொரு முறை படிக்கும் போதும் நாம் விலை மதிப்பில்லாத, புதிய தகவல்களை அடைய முடிகிறது. மறுபுறத்தில், வஞ்சத்துடன் அதைப் படிப்பவர்கள், அதில் குற்றம் காண விழைந்து அதைப் படிப்பவர்கள் குர்ஆனிலிருந்து திசை திருப்பப் படுகின்ற னர். (7:146, 17:45, 18:87, 41:44).. உண்மையில் - நடப்பது என்ன வென்றால், கடவுள் ஏற்படுத்திய கண்ணுக்குத் தெரியாத சக்திகள் அவர்களுக்கு அவர்கள் விரும்பும், தேடும் குறைகளைக் குர்ஆனில் அர்த்தம் கொள்ள உதவி செய்கின்றன. குர்ஆன் முழுமையான தாகவும் குறைகளற்றதாகவும் இருப்பதால், கடவுளின்ன் எதிரிகள் கூறும்

மற்றப் புத்தகங்களைப் போல் அல்லாமல், குர்ஆன் கடவுளால் கற்றுக் கொடுக்கப்படுகிறது (55:1-2). நமக்குத் தேவைப்படுவதை, தேவைப்படும் நேரத்தில் அவர் கற்றுக் தருகிறார் இதனால்தான் நாம் நூற்றுக்கணக்கான முறைகள் குர்ஆனைப் படித்தாலும் நமக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை .

குறைகள்' அவர்களுடைய மதி அற்ற அறிவு கெட்ட தனத்தை வெளிப் படுத்தவே உதவி செய்கின்றன.

கடவுள் அவருடைய தன்மைப் பெயர்களை (ஸிஃபத்துக்களைப்பயன் படுத்தி குர்ஆனை விரித்துரைக்கிறார். அவர் . குர்ஆனை 'அஸீம்' மகத்தானது (15:87), 'ஹக்கீம்' - ஞானம் நிறைந்தது (36:2), 'மஜீத்' - மேன்மை மிக்கது 'கறீம்' மரியாதைக் குரியது என்றெல்லாம் அழைக்கிறார். இதற்கு மேல் நாம் சொல்ல என்ன இருக்கிறது? குர்ஆன் மொழி வேறுபாடின்றி, எல்லா மனிதர்களுக்குமான கடவுளின் செய்தியாக இருப்பதால், மொழி வேறுபாடின்றி எல்லா நம்பிக்கையாளர்களுக்கும் குர்ஆனைப் பயன் படுத்தும், உரிமை, அதை அடையும் வழி கிடைக்கிறது. (41:44). இது, நாம் அதிகம் காணும் ஒரு காரணம் புரியாத நடப்புக்கு விளக்கமளிக்கிறது: அதாவது அரபி மொழி பேசும் நிராகரிப்பாளர்களை விடவும், அரபி பேசத் தெரியாத நம்பிக்கையாளர்கள் குர்ஆனை நன்கறிந்து வைத்திருக்கின்றனர்.

குர்ஆனைச் சூழ்ந்து பணிசெய்யும் கண்ணுக்குப் புலனாகாத சக்திகளால் உதவி செய்யப் படுவதால் நம்பிக்கையாளர்களுக்கு உடனடி யாகவும், அனுகூல மானதாகவும், மகிழ்ச்சி தரத் தக்கதாகவும் குர்ஆன் கிடைக்கிறது. மேலும் நிராகரிப்போருக்கோ குர்ஆனிலிருந்து ஒன்றும் கிடைக்காமல் போய் விடுவதோடு, அவர்கள் அதை அறிந்து கொண்டு பயனடைவதை விட்டும் தடுக்கப்படுகிறார்கள்.17:45,18:57, 56:79)

***

## Sura 2: The Heifet (Al-Baqarah)

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

*Jealousy Condemned*

مَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِيْنَ اَنْ يُّنَزَّلَ عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ وَاللّٰهُ يَخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ

105. Neither the disbelievers among the followers of the scripture, nor the idol worshipers, wish to see any blessings come down to you from your Lord. However, God showers His blessings upon whomever He chooses. God possesses infinite grace.

**பொறாமை கண்டனம் செய்யப்படுகிறது**

105.வேதத்தைப் பின்பற்றுபவர்களில் உள்ள நம்பமறுப்பவர்களோ, அல்லது போலித்தெய்வ வழிபாடு செய்பவர்களோ, உங்கள் இரட்சகரிடமிருந்து உங்களுக்கு எந்த ஆசீர்வாதங்களும் இறங்கி வருவதைக் காண விரும்புவதில்லை. ஆயினும், தான்தேர்ந்தெடுக்கின்ற எவர் மீதும் கடவுள் தன்னுடைய ஆசீர்வாதங்களைப் பொழிகின்றார். கடவுள் எல்லையற்ற அருட் கொடையைக் கொண்டுள்ளார்.

*The Ultimate Miracle: The Quran's Mathematical Code**

مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ مِّنْهَآ اَوْ مِثْلِهَا اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

106. When we abrogate any miracle, or cause it to be forgotten, we produce a better miracle, or at least an equal one. Do you not recognize the fact that God is Omnipotent?

**மிகச் சிறந்த அற்புதம் ! குர்ஆனின் கணிதக் குறியீடு :**

106.ஏதேனும் அற்புதத்தை நாம் ரத்துச் செய்தாலோ, அல்லது அதனை மறந்து விடும்படிச் செய்தாலோ, அதை விட மேலானதொரு அற்புதத்தை, அல்லது குறைந்த பட்சம் அதற்குச் சமமான ஒன்றை நாம் கொண்டு வருவோம். கடவுள் சர்வசக்தியுடையவராக இருக்கின்றார் என்ற நிதர்சனத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா?

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ
وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ

107. Do you not recognize the fact that God possesses the kingship of the heavens and the earth; that you have none besides God as your Lord and Master?

107. வானங்கள் மற்றும் பூமியின் அரசுரிமையைக் கடவுள் கொண்டிருக்கின்றார் என்பதை; கடவுள்- ஐத் தவிர உங்களுடைய இரட்சகராகவும் அதிபதியாகவும் எவரையும் நீங்கள் கொண்டிருக் கவில்லை என்ற நிதர்சனத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா?

اَمْ تُرِيْدُوْنَ اَنْ تَسْـَٔلُوْا رَسُوْلَكُمْ كَمَا سُئِلَ مُوْسٰى مِنْ
قَبْلُ وَمَنْ يَّتَبَدَّلِ الْكُفْرَ بِالْاِيْمَانِ فَقَدْ ضَلَّ
سَوَآءَ السَّبِيْلِ

108. Do you wish to demand of your messenger what was demanded of Moses in the past? Anyone who chooses disbelief, instead of belief, has truly strayed off the right path.

108. கடந்த காலத்தில் மோஸஸிடம் கோரப்பட்டவற்றை உங்களுடைய தூதரிடமும் நீங்கள் கோர விரும்புகின்றீர்களா? நம்பிக்கைக்குப் பதிலாக, நம்பமறுத்தலைத் தேர்ந்தெடுக்கின்றவர் எவராயினும், சரியான பாதையிலிருந்து மெய்யாகவே வழி தவறிச் சென்று விட்டார்.

وَدَّ كَثِيْرٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ لَوْ يَرُدُّوْنَكُمْ مِّنْ بَعْدِ
اِيْمَانِكُمْ كُفَّارًا حَسَدًا مِّنْ عِنْدِ اَنْفُسِهِمْ مِّنْ بَعْدِ
مَا تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ فَاعْفُوْا وَاصْفَحُوْا حَتّٰى يَاْتِيَ
اللّٰهُ بِاَمْرِهٖ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

109. Many followers of the scripture would rather see you revert to disbelief, now that you have believed. This is due to jealousy on their part, after the truth has become evident to them. You shall pardon them, and leave them alone, until God issues His judgment. God is Omnipotent.

109. இப்போது நீங்கள் நம்பிக்கை கொண்டு விட்டதால், வேதத்தைப் பின்பற்றுபவர்களில் பலர் நீங்கள் நம்ப மறுத்தலுக்குத் திரும்பி விடுவதைக் காணவே விரும் புகின்றனர். இது, சத்தியம் அவர்களுக்குத் தெளிவாகி விட்டதன் பின்னர், அவர்கள் பக்கமுள்ள பொறாமையின் காரணத்தினாலேயாகும். கடவுள் தன்னுடைய தீர்ப்பை வெளியிடும் வரை, நீங்கள் அவர்களைப் பிழைபொறுத்திட வேண்டும், அத்துடன் அவர்களை அப்படியே விட்டு விட வேண்டும். கடவுள் சர்வ சக்தி யுடையவராக இருக்கின்றார்.

وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَمَا تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ اِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

110. You shall observe the Contact Prayers (Salat) and give the obligatory charity (Zakat). Any good you send forth on behalf of your souls, you will find it at God. God is seer of everything you do.

110. நீங்கள் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்கவும் (ஜகாத்) கடமையான தர்மத்தைக் கொடுக்கவும் வேண்டும். உங்கள் ஆத்மாக்களின் சார்பாக நீங்கள் முற்படுத்தி அனுப்புகின்ற நன்மை எது வாயினும், கடவுள்-யிடம் நீங்கள் அதனைக் காண்பீர்கள். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் கடவுள் பார்ப்பவராக இருக்கின்றார்.

*All Believers Are Redeemed, Regardless of the Name of Their Religion*

**எல்லா நம்பிக்கையாளர்களும் மீட்கபடுவர் அவர்கள் மதத்தின் பெயர்கள் ஒரு பொருட்டல்ல.**

وَقَالُوْا لَنْ يَّدْخُلَ الْجَنَّةَ اِلَّا مَنْ كَانَ هُوْدًا اَوْ نَصٰرٰى تِلْكَ اَمَانِيُّهُمْ قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

111. Some have said, "No one will enter Paradise except Jews or Christians!" Such is their wishful thinking. Say, "Show us your proof, if you are right.

111. சிலர் கூறியுள்ளனர், யூதர்கள் அல்லது கிறிஸ்துவர்கள் தவிர எவர் ஒருவரும் சுவனம் நுழைய மாட்டார்கள்! அவர்களுடைய அபிலாஷைமிக்க எண்ணங்கள் இவ்விதமானதே. கூறுவீராக, நீங்கள் சரியானவர்களாக இருந்தால், உங்களுடைய சான்றை எங்களுக்குக் காட்டுங்கள்.

وَقَالُوْا لَنْ يَّدْخُلَ الْجَنَّةَ اِلَّا مَنْ كَانَ هُوْدًا اَوْ نَصٰرٰى تِلْكَ اَمَانِيُّهُمْ قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

112. Indeed, those who submit themselves absolutely to God alone, while leading a righteous life, will receive their recompense from their Lord; they have nothing to fear, nor will they grieve.

112. உண்மையில், நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற நிலையில், கடவுள்-க்கு மட்டும் தங்களையே பரிபூரணமாகச் சரணடையச் செய்பவர்கள், அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்களுடைய பிரதி பலனைப் பெற்றுக் கொள்வார்கள்; அவர்கள் அச்சம் கொள்ள எதுவுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

## <u>*Foot Note*</u>

**2:106 The Quran's mathematical miracle is perpetual & greater than previous miracles (34:45, 74:35). Like the Quran itself, it confirms, consummates, and supersedes all previous miracles.*
**2:111-112 See 2:62 and 5:69.*

## அடிக்குறிப்புகள் :

2:106. குர்ஆனின் கணித அற்புதமானது, காலத்தால் அழியாததும், முந்தைய அற்புதங்களைக் காட்டிலும் பெரிதானதுமாகும் (34:45, 74:35) குர்ஆனைப் போலவே அது முந்தய எல்லா அற்புதங்களையும் உறுதிப் படுத்துவதாகவும், பூரணப் படுத்துவதாகவும், மிகைக்கக்கூடியதாகவும் உள்ளது.

2:111-112- பார்க்க - 2 : 62 மற்றும் 5 : 69

# குர்ஆன் மட்டும் போதாதா

**அல்முபீன் இதழின் கேள்விக்கு**
**குர்ஆனை கொண்டு பதில்கள்**

உங்களில் எவரேனும் ஒரு முஃமினை தவறாகக் கொலை செய்து விட்டால் அதற்குப் பரிகாரமாக முஃமினான ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அவனது குடும்பத் தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். (அல்குர்ஆன்4:92)

முபீனின் கேள்வி : நஷ்ட ஈடு என்பதன் அளவு கோல் என்ன? நஷ்ட ஈடு கொடுக்க முடியாத அளவுக்குள்ள ஏழை கொலை செய்து விட்டால் என்ன செய்ய வேண்டும்.

இன்று உலகில் எத்தனையோ முஸ்லிம் நாடுகள் உள்ளன. இவற்றில் எந்த ஒரு நாட்டிலும் இறைவனின் சட்டங்களான அல்குர்ஆன் மட்டும் சட்டமாக அமலில் இல்லை. இது நியாயம் தானே, அவர்கள்தான் (எல்லா முஸ்லிம் மதத்தவர்களும் அடிபணிந்தவர்கள் அல்லர்) இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆன் மட்டும் சட்டமாக இருக்கப் போதாது, அவற்றுடன் நபியின் சொற்களாகக் கருதப்படும் ஹதீஸ்களும் மார்க்கச் சட்டங்கள் என்று கூறுகிறார்களே, பின்னர் எப்படி அல்குர்ஆனை மட்டும் ஏற்றுக் கொள்வார்கள்? என்று நீங்கள் கேட்கலாம். இங்கே நாம் உங்களுக்கு ஒரு உண்மையை நினைவூட்ட விரும்புகிறோம். இன்று உலகில் எந்த ஒரு முஸ்லிம் நாட்டிலும், இவர்கள் கூறுவது போல, குர்ஆனும் ஹதீஸும் மட்டும் சட்டமாக இல்லை.

"குர்ஆனும் ஹதீஸும் மட்டும்தான் சட்டம் என்று வாயளவில் இவர்கள் கூறினாலும், அதை நடைமுறையில் எந்த ஒரு நாடும் செயல்படுத்து வதில்லை. குர்ஆனை விட்டு வெளியில் போய் ஹதீஸ்களும் மார்க்கம் என்றவர்கள் அதுவும்

போதாமல் போகவே இஜ்மாவு (ஒத்த கருத்து அதாவது அவர்களுடைய தலைவர்களின் கருத்துக்கு ஒத்த கருத்து) என்றும் கியாஸ் என்றும் (அதாவது குர்ஆனிலும் ஹதீஸிலும் இல்லாதவற்றை, கூறப்படா தவற்றை, அவ்விரண்டின் அடிப்படையில் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வருவது), மேலும் மேலும் குர்ஆனை விட்டு விலகிச் சென்று விட்டனர்.

இன்று அதையும் தாண்டி தங்கள் ஆட்சி நிலைத்திருக்க என்னென்ன சட்டங்கள் தேவை என்று அந்நாடுகளின் தலைவர்கள் கருதுகிறார்களோ அவையும் சட்டங்களாக்கப்பட்டு வருகின்றன. இதுவே இன்றைய முஸ்லிம் நாடுகளின் நிலை. இந்தியாவின் அண்டை. நாடான பாகிஸ்தான் முஸ்லிம்களின் நாடாக உள்ளது. அங்கே கட்டுப்பாடற்ற ஜனநாயகம் அல்லது அடக்குமுறை மிகுந்த ராணுவம் ஆகிய இரண்டின் ஆட்சி மாறி மாறி வருகிறது.

அவர்களால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குர்ஆன் ஹதீஸின் ஆட்சி அங்கு இல்லையே ஏன்? அங்கு மட்டுமல்ல உலகில் எங்குமே இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் குர்ஆன் ஹதீஸின் ஆட்சி இல்லை . சவூதியில் இருப்பதாகச் சிலர் கூறுவர். அங்கு பரம்பரை மன்னர் ஆட்சி முறை உள்ளது. இது அவர்களுடைய ஹதீஸ்களுக்கும் முரணானது.

இன்று சவூதியில் நடப்பது இஸ்லாத்தின் பெயரால் அராஜக, அடக்குமுறை ஆட்சியே அன்றி குர்ஆன் ஹதீஸின் ஆட்சி அல்ல. தாலிபானின் தவறான இஸ்லாமிய அடக்கு முறை ஆட்சி சமீபத்திய பிரசித்தம்.ஆக, இன்று உலகில் எங்குமே இஸ்லாமிய ஆட்சி இல்லை என்றாலும், ஆங்காங்கே குட்டிக் குட்டித் தலைவர்கள் 'இஸ்லாமிய ஆட்சி', இறைவனின் ஆட்சி என்று முஸ்லிம்களை மதிமயக்கி மூளைச் சலவை செய்து தீவிரவாதிகளாக மாற்றி அராஜகச் செயல்கள் புரியத் தூண்டுவது நாம் காணும் உலக நடப்பாக உள்ளது.

'இஸ்லாமிய ஆட்சி', 'இறைவனின் ஆட்சி' என்று இவர்கள் கூக்குரலிட்டுக் கொண்டு, அதை ஏற்படுத்துவதற்காக 'ஜிஹாத்' என்ற பெயரில் அராஜகம் செய்து கொண்டு இருந்தாலும் இவர்களுக்குள் கருத்தொற்றுமை இல்லை. இதுதான் இஸ்லாமிய ஆட்சி என்பதற்கு ஒரு தெளிவான இலக்கணத்தை (Definition) அவர்களால் ஒரு போதும் கூறமுடிவதில்லை .

உண்மையில் இறைவனின் ஆட்சி என்பது குர்ஆனை மட்டும் அடிப்படை அமைப்புச் சட்டமாகக் (Constitution) கொண்டு அதில் காணப்படும் நெறிமுறைகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்து (Parlimentarian System) ஒரு மித்த கருத்துக்களின் அடிப்படையில் அமைவதே ஆகும்.

'இஸ்லாமிய ஆட்சி' இவர்கள் ஆளும் நாடுகளிலும் இல்லை, வாழும் நாடுகளிலும் இல்லை. ஆயினும் அது குறித்த வாதப் பிரதிவாதங்களை சர்ச்சை செய்து மக்களைப் பல்வேறு பிரிவினர்களாக ஆக்கி அதில் குளிர் காய்வது, அன்று முதல் இன்று வரை 'இஸ்லாமியத் தலைவர்களின்' நடைமுறையாகி விட்டது, அத்தகைய கேள்விகளில் அற்பமானது ஒன்றே அல்முபீன் இதழில் கேட்கப்பட்டுள்ளது. ஆயினும் அதற்குரிய விடை மிக எளிமையானதே ஆகும்.

எவரேனும் தவறுதலாக ஒரு நம்பிக்கையாளரைக் கொலை செய்து விட்டால் அவர் அதற்குப் பரிகாரமாக ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும், (இன்று அடிமைச் சந்தை ஒழிக்கப் பட்டுவிட்டதால் அடிமைகள் கிடைக்காத பட்சத்தில் 2 மாதங்கள் தொடர்ந்து உண்ணா நோன்பிருக்க வேண்டும் என்று 4:92கூறுகிறது.

நஷ்ட ஈட்டின் அளவுகோல் என்ன என்பதை கொலை செய்ப் பட்டவரின் குடும்பத்தாருடன் கலந்தாலோசித்து குர்ஆனின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் வழக்கின் தன்மையைப் பொறுத்து முடிவு செய்யும். மேலும், நஷ்ட ஈடு கொடுக்க முடியாத அளவுக்குள்ள ஏழை கொலை செய்து விட்டால் என்ன செய்வது என்பதையும் அந்நீதிமன்றங்களே, வழக்கின் தன்மையைப் பொறுத்து, குர்ஆன் காட்டும் நெறிமுறைகளின் அடிப்படையில் முடிவு செய்யும்.

இவ்விரண்டு விஷயங்களும் வழக்கின் தன்மைக் கேற்ப மாறுபடும், என்பதைச் சராசரி மனிதர்களும் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே இறைவன் மனிதர்களின் (Exercise of Judgement) நீதி வழங்குதலை சோதிப்பதற்காக விட்டு வைத்திருக்கும் விஷயங்கள் அவை. அவற்றிற்கு ஒரே விதமான பதில் கூறப்பட வேண்டும் என்று இவர்கள் எவ்வாறு எதிர்பார்க்கிறார்கள்?

இன்ஸ்டன்ட் இட்லி, இன்ஸ்டன்ட் காஃபி போல் எல்லா கேள்விகளுக்கும் இன்ஸ்டன்ட் பதில்களும் வேண்டுமோ இவர்களுக்கு?

சோதனை செய்யப் படுவதற்காகவே இவ்வுலகிற்கு நாம் வந்துள்ளோம் என்பதை மறந்து விட்டார்கள் போலும்.

அல்முபீமுனுடைய அடுத்த கேள்வி, 4:101 வசனத்தைப் பற்றியது. அதாவது சாதாரணமாகத் தொழுகையை எப்படித் தொழ வேண்டும்? சுருக்கித் தொழுவது எப்படி?

குர்ஆன் ஒளியில் நம் தொழுகையை எவ்வாறு நிறை வேற்றுவதுஎன்றவிபரங்களை நமது புதிய நினைவூட்டல் இதழின் ஜனவரி 2000, மற்றும் மார்ச் 2000 ஆகிய வெளியீடுகளில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. போரின் போது பிரயாணத்திலிருந்தால் சுருக்கித் தொழுது கொள்வது எப்படி என்பதை 4:101ம் வசனத்திற்கு அடுத்த வசனமான 4:102ல் இறைவன் விவரித்துக் கூறுகிறார்.

போரின் போது (நிராகரிப்பவர்கள் உங்களுக்குத் தீங்கிழைப்பார்கள் என்று நீங்கள் அஞ்சினால்) பிரயாணங்களில் உங்கள் தொழுகைகளை சுருக்கிக் கொள்ளலாம் என்று தான் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால் இன்றைய முஹம்மதியர்கள் அச்சமில்லாத பிரயாணங்களிலும் தொழுகையைச் சுருக்கிக் கொள்கிறார்கள், வழமை போல் பிரயாணம் என்றால் என்ன? எத்தனை கல்? அல்லது எத்தனை மைல் என்று தீராத ஒரு சர்ச்சையைச் செய்து வருகின்றனர்.

பிரயாணம் என்றால் என்ன? என்பதைக் கூட தங்கள் தலைவர்கள்தான் கூற வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் சுய சிந்தனையை அடகு வைத்து விட்டவர்கள் அன்றி வேறு யார்? இவ்வளவுக்கும் பிரயாணம் என்றால் என்ன என்பதை இவர்கள் நன்கு அறிந்தே இருக்கிறார்கள்.

இத்துடன் அல்முபீன் இதழின் குர்ஆன் மட்டும் போதுமா? என்ற 'சிறப்பிதழில்' அவர்கள் கேட்டிருந்த கேள்விகளின் வரிசையில் உள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் நாம் பதில் கூறி விட்டோம். இந்தக் கேள்வி களுக்குத்தான் அவர்களுக்கு, குர்ஆன் முழுவதும் தேடிப்பார்த்தும் பதில் கிடைக்கவில்லையாம்! நம்மிடம் இக்கேள்விகளை வைப்பதற்கு

முன்பே 'குர்ஆன் மட்டும் போதும் என்ற கொள்கையுடையவர்களால் கூட இக்ள்விகளுக்குக் குர்ஆனில் இருந்து பதில் சொல்ல முடியவில்லை' என்றும் எழுதி உள்ளனர்.

இன்னும் ஹதீஸ்களுக்கு வக்காலத்து வாங்குபவர்களின் குற்றச்சாட்டுக்கள் கேள்விகள் அனைத்தும் இத்தகையதே. அவர்களுடைய எல்லாக் கேள்விகளுக்கும் குர்ஆன் தெள்ளத் தெளிவான பதில்களைத் தந்து உள்ளது என்பதே உண்மை.

இப்போது அவர்களுடைய கேள்விகளின் வரிசைக்கு நாம் பதில் தந்து விட்ட நிலையில் அடுத்து அவர்கள் எழுப்பும் வாதங்களில் சிலவற்றை நாம் காண்போம். நிராகரிப்போர் தங்களுக்கிடையில் ஏராளமான பிளவுகளில் இருந்த போதிலும், சத்தியத்தை எதிர்ப்பது அவர்கள் அனைவருடைய பொதுக்குறிக்கோளாக இருப்பதால் அதில் மட்டும் ஒன்று சேர்ந்து கொள்ள முயற்சிப்பர்.

அந்த அடிப்படையில் அவர்கள் சத்தியத்திற்கெதிராக எழுப்பும் வாதங்களும் ஒத்ததாகவே உள்ளன. அல்முபீன் இதழுடைய வாதங்களையே ஜமாத்தே இஸ்லாம் என்ற இயக்கமும் அவர்கள் வெளியிட்ட பிரசுரத்தில் எழுப்பி உள்ளது. எனவே இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழுப்பிய சில வாதங்களுக்குரிய பதில்களை நாம் காண்போம்.

இறைவன் குர்ஆனின் பலவசனங்களில், வேதத்தையும், ஞானத்தையும் நபிக்கு அருளியதாகக் குறிப்பிடுகிறார். வேதம் என்பது குர்ஆன், ஞானம் என்பது ஹதீஸ்கள்தான். எனவே ஹதீஸ்களும் மார்க்க ஆதாரமாகக் கொள்ளப் படவேண்டியவை என்பதே அவர்களுடைய முதல் வாதத்தின் சாரமாகும். அதாவது வேதம் தனி, ஞானம் தனி இரண்டும் வேறு வேறு விஷயங்கள். இதுவே அவர்களுடைய கூற்று. இக்கூற்றை நாம் குர்ஆன் ஒளியில் ஆராய்வோம்.

நபியின் சுன்னத் (நடைமுறை) என்ற ஒரு விஷயம் குர்ஆனில் கூறப்படாத ஒன்றாக இருக்கவே, ஸன்னி அறிஞர்கள் குர்ஆனுடைய சில வார்த்தைகளின் அர்த்தத்தைத் திறமையாகக் கையாண்டு துஷ்பிரயோகம் செய்து தங்களுக்கு மிகவும் விருப்பமான ஹதீஸ்களுக்கு ஆதாரம் தேடிக் கொள்ள முயற்சிக்கின்றனர். குர்ஆனில் இடம்பெறும் 'ஹிக்மத்' என்ற வார்த்தையின் அர்த்தம் 'ஞானம்'

என்பதே. ஞானம் என்பது ஹதீஸ்கள்தான் (நபியின் சொற்கள் என்று கருதப்படுபவை) என்ற வாதத்தை அல்குர்ஆன் ஆணித்தரமாக முறியடிக்கின்றது.

இந்த 'ஞானம்' என்ற வார்த்தை (ஹிக்மத்) குர்ஆனில் 19 வசனங்களில் மொத்தம் 20 முறை இடம் பெறுகிறது.

2:251ல் இறைவன் தாவூதக்கு (David) ஞானத்தை அளித்ததாகக் கூறுகிறார். அந்த ஞானம் என்பது முஹம்மத் நபியின் நடைமுறை அல்ல -என்பது நமக்குக் தெரிகிறது.

4:54ல் இப்றாஹிமின் குடும்பத்தாருக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுத்ததாகக்

குர்ஆனில் இடம்பெறும் ஹிக்மத்' என்ற வார்த்தையின் அர்த்தம் 'ஞானம்' என்பதே. ஞானம் என்பது ஹதீஸ்கள்தான் (நபியின் சொற்கள் என்று கருதப்படுபவை) என்ற வாதத்தை அல்குர்ஆன் ஆணித்தரமாக முறியடிக்கின்றது. ஞானம் என்றால் எது என்பதை இறைவன் 17:22 முதல் 17:39 வரை விவரிப்பதை நாம் காணலாம்.

3:81ல் எல்லா நபிமார்களுக்கும் வேதமும் ஞானமும் வழங்கப் பட்டதாக இறைவன் கூறுகிறார். அனைத்து நபிமார்களும் வேதத்தையும், முஹம்மத் நபியின் நடைமுறையையும் கொண்டு வந்தனர் என்பது இதற்கு அர்த்தம் இல்லை, அல்லவா?

கூறுகிறார். இதுவும் முஹம்மத் நபியின் நடைமுறை அல்ல.

5.110ல் ஈஸாவுக்கு (Jesus) வேதமும் ஞானமும் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார். இதுவும் முஹம்மத் நபியின் நடைமுறையைக் குறிப்பிடவில்லை.

31:12ல் லுக்மான் என்பவருக்கு ஞானத்தை வழங்கியதாகக் கூறுகிறார் கண் கூடாக, இங்கு ஞானம் எனப்படுவது ஸுன்னத்தும், ஹதீஸும் அல்ல.

43:63ல் ஈஸா நபி (Jesus) தான் வேதத்தையும், ஞானத்தையும் கொண்டு வந்திருப்பதாகக் கூறுகிறார். இதுவும் முஹம்மத் நபியின் நடைமுறையைக் குறிப்பிடுவது அல்ல.

குர்ஆன் (ஹிக்மத்) ஞானம் நிறைந்தது என்று இறைவனால் வர்ணிக்கப்படுகிறது. - பார்க்க வசனங்கள் 10:1, 31:2, 36:2, 43:4...........

17:39ல் அல்குர்ஆனின் ஆசிரியரான இறைவன் ஞானம் என்றால் என்ன என்று நமக்கு விவரித்துக் கூறுகிறார். எனவே இதற்கு மாறாக யாரும் வாதிக்க முடியாது. அவ்வசனத்தின் தொடரில் இறைவன் பல நற்குணங்களையும், கட்டளை களையும் கூறுகிறார். இறுதியில் கூறுகிறார், 'இது உமது இறைவன், உமக்கு அறிவித்த சில ஞான உபதேசங்களாகும்', எனவே ஞானம் என்பது குர்ஆனில் பொதிந்திருக்கும் உபதேசங்களே என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

ஞானம் என்றால் எது என்பதை இறைவன் 17:22 முதல் 17:39 வரை விவரிப்பதை நாம் காணலாம்.

மேலும் 2:269ல் இறைவன் தான் விரும்பியவர்க் கெல்லாம் ஞானத்தை வழங்குவதாகவும் யார் ஞானம் கொடுக்கப் பட்டாரோ அவர் பெரும் பேறு பெற்று விட்டார் என்றும் கூறுகிறார். இங்கே 'விரும்பியவர்க் கெல்லாம்' என்ற வார்த்தை எல்லா நம்பிக்கையாளர்களையும் உட்படுத்தியதே அன்றி தூதர்களுக்கு மட்டும் என்றல்ல. இதுவும் ஞானம் என்பது ஹதீஸ்களைக் குறிப்பிடவில்லை என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது.

சிலர் வேதமும் ஞானமும் ஒன்றே என்றால் ஏன் இறைவன் இரண்டையும் தனித் தனியாகக் குறிப்பிட வேண்டும் என்று கேட்கின்றனர். அவர்கள் இறைவனைக் கேள்வி கேட்கிறார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

மேலும், ஒரு முழுமையான விஷயத்தில் உள்ள ஒரு பகுதியைச் சிறப்பித்துக் கூறும்போது முதலில் முழுமையானதைக் கூறிவிட்டுப் பின்னர் சிறப்பித்துக் கூறப்பட வேண்டிய அதன் ஒரு பகுதியைக் குறிப்பிடுவது அரபு மொழியில் பொதுவான ஒரு வழக்கமாகும்.

உதாரணமாக, நீங்கள் ஒருவரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து விட்டு அதில் உள்ள 7வது அத்தியாயத்தை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள் .

எனவே, 'இந்தப் புத்தகத்தையும் 7வது அத்தியாயத்தையும் படியுங்கள் என்று நீங்கள் அவரிடம் கூறினால், அப்புத்தகமும் அதன் 7வது அத்தியாயமும் வேறு வேறு என்பது அதற்கு அர்த்தம் அல்ல. குறிப்பாக, 7வது அத்தியாயம் படிக்கப்பட வேண்டும் என்பதே பொருள்.

இவ்வாறே 2:238 'நீங்கள் தொழுகையைப் பேணிக் கொள்ளுங்கள் மேலும் நடுத் தொழுகையையும்; என்று இறைவன் கூறுகிறார். எனவே, தொழுகை வேறு, நடுத்தொழுகை வேறு என்று நாம் கூறமாட்டோம். இறைவன் கூறுவதற்குப் பொருள் 'வேதமும். ஞானமும்' என்று வேறு வேறு என்பதல்ல. வேதத்தில் உள்ளடங்கி இருப்பதே ஞானமாகும்.

மேலும் வேதமும், ஞானமும் ஒன்றே, என்பதற்குக் குர்ஆன் நமக்கு மற்றொரு ஆதாரமும் தருகிறது 2:231ல்

...... அவர் உங்கள் மீது பொழிந்த அருட்கொடைகளை நினைத்துப் பாருங்கள். மேலும் அவர் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் இறக்கினார் 'அதைக் ' கொண்டு உங்களுக்குப் போதனை செய்வதற்காக.

இவ்வசனத்தில் இறைவன் வேதத்தையும் ஞானத்தையும் கூறிவிட்டுப் பின்னர் அவ்விரண்டையும் சேர்த்து 'அதைக் கொண்டு' என்று கூறுகிறார். இவ்வசனத்தில் இறைவன் யஇஸிகும் பிஹி' என்று ஒருமையில் கூறுவதால் 'கிதாபும், ஹிக்மத்தும் (வேதமும், ஞானமும் ஒன்றே என்று இறைவன் சுட்டிக் காட்டுகிறார். அவை இரண்டும் வெவ்வேறு விஷயங்கள் என்றால் 'அவற்றைக் கொண்டு உங்களுக்குப் போதனை செய்வதற்காக 'ய இஸீகும் பிஹிமா' என்று இருமைச் சொல்லால் கூறியிருப்பார்.

இறைவன் தவறுதலாக இலக்கணப் பிழைகள் செய்வதில்லை. அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் அவர் தன் பூரண ஞானத்தின் அடிப்படையில் இறக்கி உள்ளார். எனவே 2:231;ல வேதத்தையும் ஞானத்தையும் குறிப்பிடும் போது இறைவன் ஒருமைச் சொல்லால் குறிப்பிடுவதால் அவை இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று உள்ளடங்கியதே என்று நாம் உறுதிப்படுத்தப் படுகிறோம்

(தொடரும்)

# அர்த்தம் அனர்த்தம்

கடந்த சில மாதங்களாக 'இஸ்லாமிய அறிஞர்கள்' குர்ஆனின் தெளிவான வசனங்களுக்குரிய அர்த்தங்களில் அனர்த்தம் செய்து வைத்திருப்பதைக் கண்டு வருகிறோம். நபியின் சொற்கள் என்று கருதப்படும் ஹதீஸ்களின் அடிப்படையில் (மட்டும்) குர்ஆனை அணுகுவதால் குர்ஆனின் அடிப்படைத் தத்துவமான ஓரிறைக் கொள்கையைக் கூட அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றும் கண்டோம்.

இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆனை மனிதர்களின் வார்த்தைகளான ஹதீஸ்களின் அடிப்படையில் மட்டுமே அணுகுவோம் என்று அவர்கள் முடிவெடுத்து விட்டதன் காரணத்தால் அவர்களுக்குச் சரியான குர்ஆன், இறைவன் இறக்கி, இலகுவாக்கிய குர்ஆன் கிடைக்க வில்லை. அவர்களுக்குக் கிடைத்திருப்பது தவறான குர்ஆன், புரிந்து கொள்ளக் கடினமான, விவரிக்கப்படாத குர்ஆன்.

ஆம்! சரியான குர்ஆனை, அதன் தெளிவான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதை விட்டும் அவர்கள் இறைவனால் தடுக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் இறைவனின் வார்த்தைகளில் முழுமையான நம்பிக்கை கொள்ளாதவர்கள், அவருடைய எச்சரிக்கைக்குக் கட்டுப்படா தவர்கள், குர்ஆனைப் புரிந்து கொள்வதை விட்டுத் தடுக்கப்படுவார்கள் என்பது இறைவனால் விதியாக்கப்பட்ட ஒன்று. 17:45, 18:57. சரியான குர் ஆன் அவர்களுக்குக் கிடைப்பதை' இறைவன் தடுத்து விட்டதால் அவர்களுக்கு சரியான தொழுகை கிடைக்கவில்லை, சரியான நோன்பு கிடைக்கவில்லை, சரியான ஜகாத் கிடைக்கவில்லை, சரியான ஹஜ் கிடைக்கவில்லை. மொத்தத்தில்

சரியான இஸ்லாம் (அடிபணிதல்) கிடைக்கவில்லை. குர்ஆனில் கூறப்படும் எச்சரிக்கைகளை அவர்கள் பொருட்படுத்தாததால் அதில் கூறப்படும் நற்செய்திகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.
இம்மாத அர்த்தம் அனர்த்தம் பகுதிகளில் இறைவனின் நற்செய்திகளில் ஒன்றை ஹதீஸ்களின் அடிப்படையில் இவர்கள் சிதைத்து, சின்னா பின்னமாக்கி வைத்திருப்பதைக் காண்போம். நம்பிக்கையாளர்க்கு நற்செய்தி கூறும் அந்த இறைவசனம் 5:101. முதலில் அதன் சிதைக்கப்பட்ட மொழி பெயர்ப்புக்களைக் காண்போம்.

○●○

**5:101க்கு ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு**

ஈமான் கொண்டவர்களே! சில விஷயங்களைப் பற்றி (அவசியமில்லாமல்) கேட்டுக் 'கொண்டிராதீர்கள். (அவை) உங்களுக்கு வெளிப்படுத்தப் படுமானால் உங்களுக்கு (அது) தீங்காக இருக்கும். மேலும் குர்ஆன் இறக்கப்படும் சமயத்தில் அவை பற்றி நீங்கள் கேட்பீர்களானால் அவை உங்களுக்குத் தெளிவாக்கப்படும்; (அவசியமில்லாமல் நீங்கள் விசாரித்ததை) அல்லாஹ் மன்னித்து விட்டான்; அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் மிக்க பொறுமையுடையோனுமாவான்.

○●○

**5:101க்கு அப்துல் ஹமீது பாக்கவியின் மொழிபெயர்ப்பு**

விசுவாசிகளே! (அவசியமின்றி நபியிடம்) ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் (துருவித் துருவிக்) கேட்டுக் கொண்டிருக் காதீர்கள். (ஏனென்றால் அவைகள்) உங்களுக்கு அறிவிக்கப்பட்டால் அவை உங்களுக்கு வருத்தம் தரக்கூடும். அதிலும் இந்தக் குர்ஆன் அருளப்பெறும் சமயத்தில் அத்தகைய விஷயங்களைப் பற்றி நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தால் அவை உங்களுக்கு அறிவிக்கப் பட்டு விடும் (அதனால் நீங்கள் கஷ்டத்திற்குள்ளாகி விடலாம். எனினும் இது சமயம்) அதனைப்பற்றி அல்லாஹ் உங்களை மன்னித்து விட்டான். (ஏனென்றால்) அல்லாஹ் மன்னிப்போனும் மிக்க பொறுமை யுடையோனுமாயிருக்கின்றான்.

○●○

### 5:101க்கு அப்துல் வஹ்ஹாப், நிஜாமுத்தின் மன்ப ஈ ஆகியோரின் மொழிபெயர்ப்பு

முஃமின்களே! சில விஷயங்கள் - உங்களுக்கு அவை வெளிப்படுத்தப் பட்டால் உங்களுக்குத் தீமை பயக்கக் கூடியது – குறித்து (நம் ரஸூலிடம் வீணான கேள்விகளை) நீங்கள் கேட்காதீர்கள். மேலும் குர்ஆன் இறக்கப்படுகின்ற நேரத்தில் அவற்றைப் பற்றி நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தால் உங்களுக்கு அது வெளிப்படுத்தப்பட்டு விடும். அல்லாஹ் (நீங்கள் வீணாகக் கேட்ட அவற்றை மன்னித்து விட்டான். அல்லாஹ் மிக்க மன்னிக் கின்றவனாகவும், சகிப்புத் தன்மை யுள்ளவனாகவும் இருக்கின்றான்.

○●○

### 5:101க்குக் காதியானிகளின் மொழிபெயர்ப்பு

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு வெளிப்படுத்தினால் உங்களுக்கு வருத்தம் தரும் விஷயங்கள் பற்றிக் கேள்வி கேட்காதீர்கள். ஆனால் குர்ஆன் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் நீங்கள் அவைபற்றிக் கேள்வி கேட்டால் அவை உங்களுக்கு வெளியாக்கப்பட்டு விடும். அல்லாஹ் (வேண்டுமென்றே) . அவற்றை விளக்காமல் விட்டிருக்கின்றான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மிக்க பொறுமையாளனுமாவான்.

○●○

### 5:101க்கு IFT மொழிபெயர்ப்பு

இறை நம்பிக்கை கொண்டவர்களே! சில விஷயங்கள் உங்களிடம் வெளிப்படுத் தப்பட்டால் உங்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தும் அவற்றைப் பற்றி நீங்கள் வினவாதீர்கள். ஆயினும் குர்ஆன் இறக்கியருளப்பட்டுக் கொண்டி ருக்கும் வேளையில் அவற்றைப் பற்றி நீங்கள் வினவினால் அப்போது அவை உங்களுக்கு வெளிப்படையாகக் கூறப்பட்டு விடும். நீங்கள் (இதுவரை) கேட்டவற்றை அல்லாஹ் மன்னித்து விட்டான். அல்லாஹ் மன்னிப்பு வழங்கு பவனாகவும், சகிப்புத் தன்மை உடையவனாகவும் இருக்கின்றான்.

மேற்கண்ட மொழி பெயர்ப்புக்களை ஒருவர் படித்தால் இவ்வசனத்தில் இறைவன் மனிதர்களுக்கு என்ன கூறுகிறார்

என்பதில் பல சந்தேகங்கள் உதிக்கும். உதாரணமாக, ‘சில விஷயங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிராதீர்கள்' என்றால் அந்த சில விஷயங்கள் என்ன?' அவை வெளிப்படுத்தப் படுமானால் உங்களுக்குத் தீங்காக இருக்கும்' என்றால், அவை ஏன் தீங்காக இருக்கும்? இது. இறைவன் நம்பிக்கையாளர் அனைவருக்கும் கூறும் ஒரு விஷயமா? அல்லது நபித் தோழர்கட்கு மட்டுமா?
மேலும் 'குர்ஆன் இறக்கப்படும் சமயத்தில் அவை பற்றி நீங்கள் கேட்பீர்களானால் அவை உங்களுக்குத் தெளிவாக்கப்படும்' என்றால் அவர்கள் கேட்ட கேள்விகள் எவை? எத்தகையவை? குர்ஆன் இறங்கும் சமயத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் தானே அவை? பின்னர் ஏன் அவை தெளிவு படுத்தப் படவில்லை? தெளிவு படுத்தப்படும் என்று கூறிய இறைவன் அதற்கு முரணாக அவற்றை மன்னித்து விட்டதாகக் கூறுகிறாரே, அவை எவை?

இவ்வசனம் நபியின் காலத்தில் நடந்த ஒரு விஷயத்தைப்பற்றிய தகவல் மட்டும்தானா? இதில் இன்றைய நம்பிக்கையாளர்களுக்கு என்னசெய்திஉள்ளது,இதன்பின்னர் அத்தகைய கேள்விகள் தேட்கப்பட வில்லையா? இப்போது அத்தகைய கேள்விகள் கேட்கப்பட்டால் என்ன செய்வது? ஹதீஸ்களில் ஏராளமான கேள்விகள் நபியிடம் கேட்கப்பட்டதாகநாம் அறிகிறோம்.

மார்க்க விஷயங்களை நபித் தோழர்களும், தோழியரும் துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்ததாக அவை கூறுகின்றனவே, அவற்றிற் கெல்லாம் குர்ஆனில் பதில்கள் கூறப்படாமல் தனியாக 'ஹதீஸ்களில்' மட்டும் கூறப்பட்டுள் ளனவே அது ஏன்? குர்ஆனில் தெளிவு படுத்தப்படும் என்றுதானே இறைவன் கூறுகிறார்? இங்கே ஹதீஸ்களைப் பற்றி இறைவன் எதுவுமே கூறவில்லையே ஏன்? இறைவன் இவ்வசனத்தில் 'நம்பிக்கையாளர்களே' என்று ஒரு பொதுச் சொல்லால் அழைத்துக் கூறும் செய்திதான் என்ன? இவ்வசனத்தின் இறுதியில் தன்னை மிக்க மன்னிப்பவர், மிக்க சகிப்புத் தன்மையுமுடையவர் என்று அறிமுகம் செய்கிறாரே அது எதற்காக?

இவ்வசனத்தைச் சிந்திக்கும் வாசகர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வேறு சில கேள்விகளும் எழலாம்.

மனிதர்களின் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலாக இறைவன் அருளிய வேதத்தின் இவர்களுடைய மொழிபெயர்ப் புக்களைப் படித்தால் விடை தெரியாத கேள்விகளே மிஞ்சுகின்றன. இறைவன் மனிதர்களுக்குக் கூறும் நற்செய்திகளின் மேல் போர்வையைப் போட்டு விட்டு அதன் மேலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் இவ்வசனத்தில் கடவுள் நம்பிக்கையாளர்களுக்குக் கூறும் நற்செய்தி என்ன என்பதை, அதன் சரியான ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பைக் காண்போம். அது மேற்கண்ட, மொழிபெயர்ப்புக்களைப் படித்த போது எழுந்த கேள்விகளுக்கு என்ன பதில் கூறுகிறது என்பதையும் காண்போம்.

○●○

## 5:101க்கு சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு.

O you who belive, do not ask about matters which, if revealed to you prematurely, would hurt you. If you ask about them in the light of the Quran they will become obvious to you. God has deliberately overlooked them. God is Forgiver, element.

## 5:101க்கு சரியான தமிழ் மொழிப்பெயர்ப்பு

நம்பிக்கை கொண்டவர்களே, காலம் கனிவதற்கு முன் உங்களுக்கு வெளிப் படுத்தப்பட்டால், உங்களுக்குத் தீங்கிழைக்கக் கூடிய விஷயங்களைப் பற்றிக் கேட்காதீர்கள். அவற்றைப் பற்றி குர்ஆன் ஒளியில் நீங்கள் தேடினால் அவை உங்களுக்குத் தெளிவாகும். இறைவன் ஆழ்ந்தாராய்ந்து வேண்டுமென்றே அவற்றைப் பொருட்படுத்தாது விட்டு விட்டார். இறைவன் மன்னிப்பவர், இரக்கம் மிக்கவர்.

தன் அடிமைகள் மீது மிக்க கருணையும், இரக்கமும் உள்ள கடவுளுக்கே எல்லாப் புகழும். மேற்கண்ட மொழிபெயர்ப்பில் நம்முடைய எல்லாக் கேள்விகளுக்கும் பதில்கள் உள்ளன. பதில்களை எங்கே எதன் ஒளியில் தேடுவது என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இவ்வசனத்தில் இறைவன் காலம் கனிவதற்கு முன் சில விஷயங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டால் அவை நமக்கு தீங்கிழைக்கும் என்றும் அவற்றைப் பற்றி நாம் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்றும் நம்பிக்கையாளர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

மேலும் நம்முடைய அனைத்துக் கேள்விகளுக்கும் குர்ஆன் ஒளியில் பதில் தேடினால் அவை நமக்குத் தெளிவாகி விடும் என்றும் வழிகாட்டுகின்றார். எனவே நாம் நம்முடைய எல்லாக் கேள்விகளுக்கும் குர்ஆனின் ஒளியிலே பதில்களைத் தேடுவோம். இறைவன் இவ்வசனத்தில் கேள்விகள் கேட்பதைத் தடை செய்யவில்லை. சிந்தனையின் விளைவு கேள்விகளும், தொடர்ந்த சிந்தனையின் விளைவு அதற்குரிய பதில்களும் ஆகும்.

எனவே சிந்திப்பதை ஊக்குவிக்கும் குர்ஆன் ஒரு போதும் கேள்விகள் கேட்பதைத் தடுக்க வில்லை . ஒரு குறிப்பிட்ட வகைக் கேள்விகளையே நாம் கேட்கக் கூடாது என்றும் அவை நமக்குத் தீங்காக முடியும் என்றும் கூறுகிறார். அவை எத்தகைய கேள்விகள்? இக்கேள்விக்கும் நாம் குர்ஆனின் ஒளியில் பதிலைத் தேடுவோமா?

இவ்வசனத்திற்கடுத்த வசனத்தில் இறைவன் நமக்கு முன்பிருந்தோர் அத்தகைய கேள்விகளைக் கேட்டதாகவும் பின்னர் அவர்கள் அவற்றை நிராகரிப்பவர்களாக ஆகிவிட்டார்கள் என்றும் நம்மை எச்சரிக்கிறார்.

நாம் முழுமையான குர்ஆனைப் பின்பற்றும் படி ஏவப்பட்டுள்ளோம். அவ்வாறு நாம் முழுக்குர்ஆனிலும் தேடும்போது எத்தகைய கேள்விகளை நாம் கேட்கக் கூடாது என்பதை 2 வது அத்தியாயத்தின் 67 முதல் 71 வரை உள்ள வசனங்களில் காண்கிறோம்.

2:67ன் படி, மூஸா தன் சமூகத்தாரிடம் “இறைவன் அவர்களை ஒரு பசுங்கன்றை அறுக்கும்படி கட்டளையிடுவதாக அறிவித்தார். 'அதற்கு செவிசாய்த்து அவர்கள் ஒரு பசுவை பிடித்து அறுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களுக்கு இக்கட்டளை மிகவும் சாதாரணமான ஒன்றாகப் பட்டிருக்க வேண்டும். . எனவே அவர்கள் மூஸாவிடம் கேட்கிறார்கள், 'எங்களைக் கேலி செய்கிறீரா?' இதில் என்ன கேலி இருக்கிறது என்று கேட்கிறீர்களா. அவர்கள் மனோபாவம் இதில் தெரிகிறது.

பின்னர் மூஸா கூறுகிறார் 'மடையர்கள் போல் நான் நடந்து கொள்வதை விட்டும் இறைவன் என்னைக் காப்பாராக! இப்போதும் புத்தி வராத அவர்கள் 'அப்பசு எது என்று எங்களுக்குக் காட்டும்படி உம்

இறைவனை கேளும்! உடனே அவர் இறைவனிடம் கேட்டு விட்டுக் கூறுகிறார். 'அது கிழடுமில்லாமல் கன்றுமல்லாமல் நடுத்தர வயதுப் பசு, இப்போது உங்களுக்குக் கட்டளையிட்டதைச் செய்யுங்கள்! இப்போதாவது அவர்கள் கூறப்பட்டதைச் செய்திருக்கலாம் அல்லவா? இப்போதும் செய்யவில்லை,

அவர்கள் இறைவனின் கட்டளைக்கு உடனே அடிபணியத் தயாராக இல்லை . எனவே அவர்கள் மேலும் கேட்கிறார்கள் 'அதன் நிறம் இ என்ன என்று உமது இரட்சகரிடம் கேட்டுச் சொல்லும்' அவர்களுக்குக் கூறப்படுகிறது 'அது மஞ்சளில் பளிச்சென்று, பார்ப்போரை கவரும் வண்ணம் உள்ளது!. விஷயம் கடினமாகிக் கொண்டு வருவதைக் கவனியுங்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு மேலும் தயக்கம் வந்து விடுகிறது. பின்னே வேறு என்ன வரும்? அவர்கள் கூறுகிறார்கள் 'எல்லாப் பசுக்களும் எங்களுக்கு ஒன்று போலவே தெரிகின்றன.

எனவே அவற்றில் எது என்று எங்களுக்கு காட்டும்படி உம் இரட்சகரைக் கேளும்' அத்துடன் அவர்கள் கூறுவதைக் கவனியுங்கள்.

இறைவன் இவ்வசனத்தில் கேள்விகள் கேட்பதைத் தடை செய்யவில்லை. சிந்தனையின் விளைவு கேள்விகளும், தொடர்ந்த சிந்தனையின் விளைவு அதற்குரிய பதில்களும் ஆகும்.

எனவே சிந்திப்பதை ஊக்குவிக்கும் குர்ஆன் ஒரு போதும் கேள்விகள் கேட்பதைத் தடுக்க வில்லை. ஒரு குறிப்பிட்ட வகைக் கேள்விகளையே நாம் கேட்கக் கூடாது என்றும் அவை நமக்குத் தீங்காக முடியும் என்றும் கூறுகிறார்.

'இறைவன் நாடினால் நாங்கள் நேர்வழி பெற்றிடுவோம்! பாருங்கள்! காட்டப்படும் நேர்வழியை ஏற்றுக் கொள்ளமாட்டார்களாம், கட்டளை யிட்டபடி செய்ய மாட்டார்களாம், ஆனால் இறைவன் நாடினால் நாங்கள் நேர்வழி அடைவோம்' என்று கூறுவார்களாம். உண்மை எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதைக் கவனித்தீர்களா? இப்போது அவர்களுக்கு இலகுவாகக் கூறப்பட்ட விஷயம் மேலும் கடினமாக்கப்பட்டது.

'உழவு செய்தோ , நீர் பாய்ச்சியோ, இழிவு செய்யப்படாதது அப்பசு, எந்த வடுக்களும் இல்லாதது. அவர்களுக்கே போதும் என்று தோன்றியிருக்க வேண்டும் என்வே 'இப்போதுதான் நீர் உண்மையைக் கொண்டு வந்தீர்' என்று கூறி நீண்ட தயக்கத்திற்குப் . பின் அதை மனமில்லாமலே அறுத்தார்கள்.

இறைவன் இவ்வசனத்தில் நம்பிக்கையாளர்களுக்கு உரைக்கும் உதாரணப்படி, அவர்கள் தெளிவாகக் கூறப்பட்ட. கட்டளைகளை செயல்படுத்த வேண்டும், அத்தகைய கட்டளைகளில் சர்ச்சை செய்து கொண்டு இருக்கக் கூடாது, வீண் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

குர்ஆனில், கூறப்பட்ட விஷயங்களை செய்து விட்டால் அவர்கள் குற்றம் பிடிக்கப் படமாட்டார்கள். இதற்கு மட்டுமே அவர்கள் கூலி கொடுக்க ப்படுவார்கள். இறைவனின் கட்டளைகள் கூறப்பட்ட உடன் செய்யப்படும்போது இலகுவாகவும், தயக்கத்திற்கு பின் செய்யும் போது மிகவும் கடினமானதாகவும் ஆகி விடும் என்று இவ்வுதாரணம் உரைக்கிறது.

மேலும் இதற்கு விளக்கமாக அல்ஹஜ் அத்தியாயத்தின் 67வது வசனம் 'சடங்கு விஷயங்களில் சர்ச்சைகள் கூடாதென்றும், இறைவன் பால் மட்டுமே நமது கவனம் இருக்க வேண்டும் என்று நேரடியான கட்டளை பிறப்பிக்கிறது. அதுவே நேர்வழி என்றும் அடையாளம் காட்டுகிறது.

எனவே 5:101 வசனத்தில் இறைவன், 'நம்பிக்கையாளர்களே, நீங்கள் கேட்க வேண்டாம்,' என்று கூறும் கேள்விகள் இத்தகையதே என்றும் நாம் விளங்கிக் கொள்கிறோம்.

வேதம் கொடுக்கப்பட்ட சமூகம்தான் முதலில் இறைவனின் கட்டளைகளை மீறும் என்பதற்கு நாம் குர்ஆனில் பல உதாரணங்கள் கொடுக்கப்படுகிறோம். இன்றைய நிலவரப்படியும் இறுதி வேதம் கொடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் இத்தகைய கேள்விகளைக் கேட்டு அவற்றிற்கு எவரெவரோ கொடுத்த பதில்கள் தான் ஹதீஸ்களில்நபியின்

பெயரால் இட்டுக்கட்டப் பட்டுள்ளது. இதன் காரணமாகவே அது பற்பல பிரிவுகளாகவும் மாறியது சடங்குகளில் ஆட்டுவதா, நீட்டுவதா என்று சர்ச்சை செய்து கொண்டுள்ளது. மேலும் சத்தியத்தை எதிர்ப்பதில் முன்னணியிலும் உள்ளது.

இப்போது நாம் மீண்டும் 5:101 வசனத்தைத் தொடர்ந்து சிந்திப்போம், இத்தகைய கேள்விகளை கேட்டு அவை வெளிப்படுத்தப்பட்டால் நமக்குத் தீங்காய் முடியும் என்று இறைவன் இதோபதேசம் செய்கிறார். மேலும் குர்ஆன் ஒளியில் சிந்தித்தால் எல்லா விஷயங்களும் நமக்குத் தெளிவாகி விடும் என்றும் கூறுகிறார்.

தொடர்ந்து இறைவன் 'அவற்றை வேண்டுமென்றே, நன்கறிந்தே பொருட்படுத்தாது விட்டு விட்டதாகக்' கூறுகிறார். எனவே நம்பிக்கையாளர்கள் குர்ஆனில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை மட்டும் செய்து விட்டால் போதுமானது. அதுவிஷயமாகவீண் சர்ச்சைகள் செய்து கொண்டிருப்பது நமக்குத் தீங்காக முடியும் என்றும் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் குர்ஆனில் கூறப்படாத விஷயங்களை அவர் நன்கறிந்தே பொருட்படுத்தாது விட்டு விட்டார் என்பதில் இறைவன் நம்பிக்கையாளர்களுக்குக் காட்டும் கருணை அளப்பரியது. அவர் நாடியிருந்தால் அவரை. அடைவதற்கான மார்க்கத்தை, இஸ்லாத்தை, அடிபணிதலைக் கடினமான ஒன்றாக ஆக்கியிருக்கலாம். யாரும் அவரைக் கேள்வி கேட்க முடியாது. ஆயினும் தன் படைப்புகளிடத்தில் கருணையைத் தன் மேல் விதியாக்கிக் கொண்ட காருண்யர், அடிபணிதலை இலகுவான ஒன்றாகவே ஆக்கிவைத் திருக்கிறார். எனவே இவ்வசனம் மிக்க மன்னிப்பவர், மிக்க இரக்கமுடையவர், என்று முடியும்போது நம்பிக்கையாளர்கள் நன்றி உணர்ச்சியில் திளைக்கிறார்கள்.

**குர்ஆனில் கூறப்பட்ட விஷயங்களை செய்து விட்டால் அவர்கள் குற்றம் பிடிக்கப் படமாட்டார்கள். இதற்கு மட்டுமே அவர்கள் கூலி கொடுக்கப்படுவார்கள். இறைவனின் கட்டளைகள் கூறப்பட்ட உடன் செய்யப்படும்போது இலகுவாகவும், தயக்கத்திற்கு பின் செய்யும் போது மிகவும் கடினமானதாகவும் ஆகி விடும் என்று இவ்வுதாரணம்உரைக்கிறது.**

# ஒரே ஒரு மார்க்கம்தான் உள்ளது. அது இறைவனை மட்டும் வழிபடுவதே

## ஒரு செய்தி : ஒரு கடவுள்

அதிகமான மனிதர்களுக்கு, கடவுளின் அத்தாட்சிகள் எங்கும் இறைந்து கிடக்கின்றன. அவர்கள் அந்த அத்தாட்சிகளைத் தங்களுக்குள்ளும், இயற்கையிலும், விஞ்ஞான விதிகளிலும் காண்கிறார்கள். இவை அனைத்தும், ஒரு படைக்கக் கூடிய சக்தி இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் அச்சக்தியின் தவறில்லாத அத்தாட்சிகளைச் சமூக அரங்கிலும் காண்கின்றனர். இவ்வுலகில் உள்ள ஆயிரக்கணக்கான கலாச் சாரங்களில் கடவுள் - அதாவது படைப்பவர், பாதுகாப்பவர், வழங்குபவர் - என்ற பொதுக் கருத்து இல்லாத கலாச்சாரம் ஒன்றைக் கூடக் காண்பது அரிது.

ஆயினும், அதிகமான கலாச்சாரங்கள் பலகடவுள் என்ற கொள்கையைக் கொண்டதாகவே உள்ளன. ஓர் அருளப்பட்ட வேதம் கிடைத்துக் கொண்டிருக்கும் நிலையிலும் சில மதங்கள் மாறுபட்ட தோற்றந்தரும் பல கடவுட் கொள்கையை உருவாக்கி வைத்துள்ளன. உண்மையில், ஏகத்துவக் கொள்கை (ஓர் இறைக் கொள்கை) மனிதர்களிடம் இருக்கும் ஓர் இயற்கையான உள்ளுணர்வு (குர்ஆன் 30 : 30) என்று குர்ஆன் கூறுகிறது.

உதாரணமாக, மேலை நாடுகளால் இந்து மதம், பல கடவுள் கொள்கை கொண்டது, என்றும் அவர்கள் ஏகத்துவம் என்று கருதுவதை விட்டு வெகு தூரம் விலகியது என்றும் கருதப்படுகிறது. ஆனால் பழக்கத்தில் இருக்கும் நிலைக்கு மாற்றமாக, ஓரிறைக் கொள்கை என்பது இந்து மதத்தின் வேர்களில் உள்ளது என்பதை பகவத் கீதையின் கீழ்கண்ட பத்தி தெளிவாக்குகிறது. பாக்கியம் மிக்க கடவுள் கூறினார் : நான் எனது வெளிப்படுத்தப்படாத சொரூபங்களால் எல்லா

உலகங்களிலும் ஊடுருவி இருக்கின்றேன். அனைவருக்கும் வேர்கள் என்னிடம் உள்ளன. என் வேர்கள் அவர்களிடம் இல்லை.

என்னுடைய படைப்பான இயற்கையில் மறைந்திருக்கும் நான் அந்த இயற்கையின் மூலம் ஏராளமான படைப்புக்களை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகிறேன். நான் கண்காணிப்பளானாக இருக்கும் நிலையில் இயற்கை நகர்வதையும் நகராதிருப்பதையும் அனுப்புகிறது. இதனால் தான் இப்பிரபஞ்சம் சுழல்கிறது.

மூடர்கள், இருக்கக் கூடிய அனைத்தின் அதிபதியான என்னுடைய மிகப்பெரிய தன்மையை அறியாது, மனித உருக்கொடுத்து என்னை அவமரியாதை செய்கின்றனர். நம்பிக்கையில்லாமல், செயல்கள் இல்லாமல் ஞானமில்லாமல், அறிவில்லாமல், ஏமாற்று வேலையில் பங்கு கொள்ளும் முகமாக , கொடூரமான துஷ்ட சக்தியாக்குகின்றனர்.

மற்றவர்கள் ஞானம் கூறும் தியாகங்களைச் செய்து ஒருமையுடன் என்னை வழிபடுவார்கள் வேறு யாரையும் நினைக்காமல் என்னைத் தனித்து வழிபடுபவர்களுக்கு, எப்போதும் இணக்கத்துடன் இருப்பவர்களுக்கு முழு பாதுகாப்பை நான் கொண்டு வருகிறேன். மின்னுபவற்றை வழிபடுபவர்கள் மின்னுபவற்றிடம் செல்வார்கள். முன்னோர்களை வழிபடுபவர்கள் முன்னோர் களிடமும், இயற்கையைச் சார்ந்தவற்றுக்காகத் தியாகம் செய்பவர்கள் இயற்கையைச் சார்ந்தவற்றிடமும் செல்வார்கள். ஆனால் என்னை மட்டும் வழிபடுபவர்கள் என்னிடம் வருவார்கள்.

அப்படியென்றால் இந்துத்துவம் போன்ற ஒரு மதத்தின் இத்தனை கடவுளர்களும் யார்? மறுபடியும், அம்மதத்தின் வேதங்கள் நமக்கு விளக்குகிறது. இம்முறை உபநிடதங்களில் இருந்து.

பின்னர், விதக்த சாகல்யன் அவரைக் கேட்டார்: “யக்ஞவல்க்கியரே, எத்தனை கடவுளர்கள் இருக்கின்றனர்? அவர் பதில் அளித்தார்.........” முப்பத்து முக்கோடித் தேவர்கள்” “ஆம்” இவர் கூறினார், மீண்டும் கேட்டார் : யக்ஞவல்க்கியரே, உண்மையில் எத்தனை கடவுளர் உள்ளனர்? “முப்பத்து மூன்று" அவர் கூறினல். “ஆம்!” இவர் கூறினார், மீண்டும் கேட்டார்: யக்ஞவல்க்கியரே உண்மையில் எத்தனை கடவுளர் உள்ளனர்?

“ஆறு” அவர் கூறினர்.

"ஆம்". இவர் கூறினார், மீண்டும் கேட்டார்: உண்மையில் எத்தனை கடவுளர் உள்ளனர் யக்ஞவல்க்கியரே?

“மூன்று” அவர் கூறினார்.

“ஆம்”, இவர் கூறினார், மீண்டும் கேட்டார்:
உண்மையில் எத்தனை கடவுளர் உள்ளனர் யக்ஞவல்க்கியரே,?

“இரண்டு ”, அவர் கூறினார்.

"ஆம்", இவர் கூறினார், மீண்டும் கேட்டார்: உண்மையில் எத்தனை கடவுளர் யக்ஞவல்க்கியரே,

“ஒன்றரை” அவர் கூறினார்.

“ஆம்”, இவர் கூறினார், மீண்டும் கேட்டார். உண்மையில் எத்தனை கடவுளர் யக்ஞவல்க்கியரே,

"ஒன்று” அவர் கூறினார்.

“ஆம்”, இவர் கூறினார், தொடர்ந்து கேட்டார்,

“பின்னர், அந்த முப்பத்து முக்கோடி என்பவர்கள் யார்?”

யக்ஞவல்க்கியர் கூறினார், அவை அந்த ஒரே கடவுளின் பல்வேறு சக்திகளே

மனிதர்களுக்கு ஒவ்வொன்றையும் உருவகப்படுத்திவிளக்கவேண்டியது உள்ளது. இத்தேவையை நாம் அனைத்துக் கலாச்சாரங்களிலும் உள்ள கற்பனைக் கதைகளிலும், மரபுச் சார்ந்த நம்பிக்கைகளிலும் காணலாம்.

சில விஷயங்களை நாம் புரிந்து கொள்ள முடியாத போது, ஒரு விளக்கத்தை உருவாக்கி இவ்விளக்கத்திற்கு ஒரு உணர்ச்சி மயமான சக்தியும் கொடுத்து, நம்மைப் பொறுத்தவரை . அவற்றை உண்மையாக்கிக் கொள்கிறோம்.

புரிந்து கொள்வதற்கான இத்தேவைதான், நம் கற்பனைக் கெட்டாத அந்த மகா சக்திக்கு (கடவுளுக்கு) அதனினும் கீழான உருக்கொடுக்கும்படித்தூண்டுகிறது. சில நேரம், அந்த ஒன்றிலிருந்து நாம் திரும்பிக் கொண்டு, அதைவிடக் கீழான நிலையிலிருக்கும், நாம் கண்ணால் காணக்கூடிய மனிதர்கள் பால், உதாரணமாக மகான்கள் மற்றும் இறைத்தூதர்கள் பால் முன்னோக்குகிறோம்.

துயரம் தரும் விதமாக, நமக்கு உதவி செய்யக்கூடிய ஒரே ஒருவரை விட்டு விட்டு இவர்களிடம் ப்ரார்த்தனைகளும் செய்ய ஆரம்பித்து விடுகிறோம். அவருடைய மகத்தான ஒளியி லிருந்து பார்வையை விலக்கி இவ் வுலகப் படைப்புக்களின் பால் ஓரங்

கட்டப்படுகிறோம். மேலே கூறப்பட்ட இந்து மத வேதத்தின் படி "வேறு யாரையும் நினைக்காமல், என்னை தனித்து வழிபடு பவர்களுக்கு, எப்போதும் இணக்கத்துடன் இருப்பவர்களுக்கு நான் முழுப் பாதுகாப்பைக் கொண்டு வருகிறேன்".

இம்மியளவும் பிசகாது, இதுவே யேசு (ஜீஸஸ்) மூலம் கடவுள் நமக்குச் சொன்னதாகும்.

"என்ன உண்பது, குடிப்பது என்று தேடி அலைந்து கொண்டிருப்பது உனக்கு தகுமாகாது. கவலை கொள்வதை நிறுத்து. இவ்வுலகம் சார்ந்த, நம்பிக்கையற்றவர்கள் எப்போதும் இவற்றின் பின்னாலேயே, ஓடிக் கொண்டிருப் பார்கள். இத்தேவைகள் உனக்கு உள்ளது என்பதை தந்தை அறிவார். அவருடைய ஆட்சியை உன்னில் கொண்டு வா. மற்றவை தானாய்ப் பின் தொடரும். (லூக்கா 12:29-31)

சரி, எவ்வாறு நாம் அவருடைய ஆட்சியை நம்மில் கொண்டு வருவது?

"நீர் உமது இரட்சகரை, உமது கடவுளை உம்முடைய முழுமனத்துடனும், முழு ஆன்மாவுடனும், முழுப் பலத்துடனும், முழு புத்தியுடனும் நேசிக்க வேண்டும், மேலும் உன்னை நேசிப்பது போல் உன் அண்டை வீட்டாரையும் நேசி. (லூக்கா 10:27)

இதே செய்திதான் பகவத் கீதையிலும் கூறப்பட்டிருந்தது, அல்லவா? யூதர்களின் வேதமான தவ்ராத் (T o r a h - இதுவே கிறித்துவர்களின் பழைய ஏற்பாடும் ஆகும்)

உமது இரட்சகர் இவ்வாறு கூறுகிறார். வானங்களைப் படைத்த அவரே கடவுள். உலகை வடிவமைத்துச் செய்தவரும் அதை நிலை படுத்தியவரும் அவரே. நானே இரட்சகர் வேறு யாரும் இல்லை ....

உலகத்தின் அனைத்து மூலைகளே, என்பால் திரும்பிப் பாதுகாப்புடன் இருப்பீர்களாக. ஏனெனில் நானே கடவுள் வேறு யாரும் இல்லை .

(ஏசையா 45:18,22)

உங்களுக்கு மோட்சம் தர இயலாத அரசர்கள் மீதோ, மனிதர்கள் மீதோ உமது நம்பிக்கையை வைக்க வேண்டாம். யாக்கோபுடைய கடவுளின் உதவி யாருக்கு உள்ளதோ, யார் தன் இரட்சகரான கடவுள் மீது தன்னுடைய நம்பிக்கையை வைக்கிறானோ அவனே மகிழ்ச்சியாய் இருப்பான்.

கடவுளை மட்டுமே வழிபடவேண்டும் என்ற இந்த மிக முக்கியமான செய்தியைப் பற்றியும்

நபிமார்களைப் பற்றியும், குர்ஆன் மற்றும் தவ்ராத் முழுவதும் குறிப்புக்கள் உள்ளன.

"நோவாவுக்கு (நூஹ் - Noah) விதியாக்கிய அதே மார்க்த்தையே உங்களுக்கு விதித்திருக்கிறார். மேலும் உமக்கும் (முஹம்மத்) இப்றாஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் (ஜீஸஸ்) அதையே அவர் விதியாக்கி இருக்கிறார்: "இந்த மார்க்த்தையே நீங்கள் ஆதரிக்க வேண்டும், மேலும் நீங்கள் அதைப் பிரித்து விடக் கூடாது. (குர்ஆன் 42:13) . கூறும். மார்க்கத்தை அவருக்கு மட்டும் அர்ப்பணித்தவாறு கடவுளை வழிபட வேண்டும் என்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். (குர்ஆ ன் 39:11)

உலகின் மிகப்பெரிய, இந்நான்கு மதங்களிலும், மார்க்கங்களிலும் உள்ள அதன் வேதங்களில் 'ஒரே கடவுள்' என்ற - இச்செய்தி தெளிவாக கூறப்பட்டுள்ளது. பின் நாம் ஏன் பிரிந்திருக்கிறோம்? ஏன் இந்துக்களும், முஸ்லிம்களும், யூதர்களும் கத்தோலிக்கர்களும், புரொடேஸ்டண்டுகளும் சண்டையிட்டு கொள்கின்றனர்?

நாம் வேதங்களை அதில் உள்ள போதனைகளை மறந்து விட்டு அந்த மனிதர்களையே நம்பிப் பின்பற்ற ஆரம்பித்து விட்டோம் என்பதே இதற்குக் காரணம். நாம் கடவுளின் உண்மைகளை மறந்து விட்டு நம்முடைய கலாச்சாரங்களின் 'உண்மைகளால்' மனோவசியம் செய்யப்பட்டு விட்டோம்.

ஒரே ஒரு மதம்தான், மார்க்கம்தான் உள்ளது. கடவுளை மட்டுமே கலப்பின்றி வணங்குவதே அது, அதை நீங்கள் எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் சரி. ஒரே ஒரு கடவுள் மட்டுமே இருக்கிறார். மேலும் கடவுளின் கட்டளைகளுக்கு அடிபணிவது மட்டுமே ஒரே மதமாக உள்ளது.

"நிச்சயமாக, நம்பிக்கை கொண்டோரானாலும், கிறித்துவர் களானாலும், மதம் மாறியவரா னாலும், எவர்கள் (i) கடவுளை நம்பி (ii) மறுமை வாழ்வை நம்பி மேலும் (iii) நேரிய வாழ்க்கை நடத்துகின்றனரோ, அவர்கள் தங்கள் இரட்சகரிடம் கூலியைப் பெறுவார்கள். அவர்கள் அஞ்சுவதற்கு எதுவுமில்லை, அவர்கள் கவலை கொள்ளவும் மாட்டார்கள். (குர்ஆன் : 2 : 62, மற்றும் 5: 69.)

★★★

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.

www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662